செப்டம்பர் 2012 September | இதழ் 260 ISSUE

# தமிழர் தகவல்

## TAMILS' INFORMATION

a monthly information digest இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி

ராதிகா சிற்சபைஈசனுக்கு கிருஷ்ணமேனன் நினைவு விருது





ஒன்ராறியோ வாவியை நீந்திய சாதனையாளர் ஆன்



ஒலிம்பிக்ஸ்: கனடாவின் ஒரேயொரு தங்கம் ரோஸி

சுமங்களா மிச்சிக்கன் நகரசபை உறுப்பினர்



22 வது ஆண்டு nd Year

Growing with the Community ESTD-1991

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

தொலைபேசி
416 920 9250
தொலைநகல்
416 921 6576

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்,
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
எஸ். ரி. சிங்கம்

விநியோக முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
இ. சிவலிங்கம்
எஸ். திருமுருகா
ப. சிவசுப்பிரமணியம்
பொன். சிவகுமாரன்
என். குமாரதாஸன்
நா. விமலநாதன்

தொழில்நுட்ப உதவி
ஹரன் கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

ஆசிரியரிடமிருந்து — **From the Editor**

## நிலவின் முதல் மகன்



எட்டாத மண்டலமென்று பல கனவுலகக் கதைகளுக்கு நீண்ட காலமாக வித்திட்டிருந்த சந்திர மண்டலத்தில் முதன்முதலாகக் கால்பதித்த சரித்திர நாயகன் நீல் ஆம்ஸ்ட்ராங்.

1969ஆம் ஆண்டு ஜூலை மாதம் இருபதாம் திகதி விண்வெளியில் ஆம்ஸ்ட்ராங் நிகழ்த்திய சாதனை, 'நிலவின் முதல் மகன்' என்ற மறையாத மகுடத்தை இவருக்குப் பெற்றுக் கொடுத்தது.

அப்பலோ விண்கலத்தில் பயணித்து, நிலவு மண்டலத்தில் பாதம் பதித்த முதல் மனிதன் என்ற பெருமையுடன் தனது அமெரிக்க நாட்டு தேசியக் கொடியை அங்கு நாட்டியபோது அவருக்கு வயது முப்பத்தொன்பது மட்டுமே!

தாம் நிகழ்த்திய சாதனையைத் தனிமனித வெற்றியாகப் பார்க்காது, மனிதகுலத்தின் எதிர்காலத்துச் சாதனைகளின் அடிக்கல்லாகப் பார்த்த அவரது முதல் வார்த்தைகள், *"That's one small step for (a) man, one giant leap for mankind"*.

'ஒரு மனிதனின் சிறிய காலடி இது, மனித குலத்துக்கு ஓர் இராட்சதப் பாய்ச்சல்' என்ற ஆம்ஸ்ட்ராங்கின் தீர்க்க தரிசனம் அவரது வாழ்நாளிலேயே நிரூபணமாகியுள்ளது.

1930 ஆகஸ்ட் ஐந்தாம் திகதி அமெரிக்காவின் ஒஹையோ மாகாணத்திலுள்ள வப்பகொனற்றா என்ற இடத்தில் பிறந்த இவருக்கு ஆறு வயதிலிருந்தே விமானம் ஓட்டும் விருப்பம் ஆரம்பமானது. பதினாறு வயதில் விமானிக்கான லைசன்ஸ் பெற்றார்.

1951ல் இடம்பெற்ற கொரிய யுத்தத்தில் அமெரிக்க விமானப்படையில் பணியாற்றிய இவர், மொத்தம் 121 மணித்தியாலங்களில் எழுபத்தெட்டுத் தடவைகள் கொரியாவின் மேலாகப் பறந்து தாக்குதல் நடத்திச் சாதனை புரிந்துள்ளார்.

பின்னர் 'நாசா'வில் இணைந்து விண்வெளிக்குப் பயணிக்கும் தமது கனவை அதன் வாயிலாக நனவாக்கி உலக மக்களை வியக்க வைத்த இவரது மற்றொரு வாக்கியம், *"Research is creating new knowledge'* (ஆய்வு புதிய அறிவை உருவாக்கிறது) என்பது.

சாதனையாளர் வரிசையில் இவர் தனித்துவமானவர்; பலருக்கு முன்னோடியானவர்; அமைதி வாழ்க்கையை நாடியவர்.

இருதய சத்திர சிகிச்சைக்குப் பின்னர் சில நாட்கள் நோயுற்றிருந்த நீல் ஆம்ஸ்ட்ராங் என்ற உயர்ந்த மனிதர், கடந்த மாதம் 25ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் ஒஹையோவிலுள்ள சின்சிநாட்டியில் தமது 82வது அகவையில் காலம் ஆனார்.

'நிலா'மகள் தனது முதலாவது மகனை இழந்துவிட்டார் என்பது புதிய வரலாறு.

திரு எஸ். திருச்செல்வம்

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box - 3, Station F
Toronto, ON. M4Y 2L4,
Canada

Tel: 416 920 9250
Fax: 416 921 6576

email
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
S.T. Singam

Circulation Manager
R. R. Rajkumar

Public Relation
R. Sivalingam
S. Thirumuruga
P. Sivasubramaniam
Pon. Sivakumaran
N. Kumaradasan
N.Vimalanathan

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 22வது ஆண்டு பூர்த்தி மலருக்கு நீங்களும் எழுதலாம்

கனடியத் தமிழரின் அடையாளமாகவும், கனடாவின் மூத்த தமிழ் ஊடகமாகவும் திகழும் 'தமிழர் தகவல்' இன்னமும் மூன்று மாதங்களில் 22 ஆண்டுகளைப் பூர்த்தி செய்யவிருப்பதை மிகுந்த மகிழ்ச்சியுடன் அறியத் தருகின்றோம்.

அடுத்த ஜனவரி மாதத்தில் இருபத்தியிரண்டு ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையடுத்து, 23வது ஆண்டின் முதலாவது இதழ் - அதாவது பெப்ரவரி மாத இதழ் 22வது ஆண்டு பூர்த்தி மலராக வெளிவரவுள்ளது.

இதன் தயாரிப்பு வேலைகள் இந்த மாத இறுதியில் ஆரம்பமாகவுள்ளது.

முன்னைய ஆண்டு மலர்களைப் போன்று ஆழமான, ஆய்வுகள் நிரம்பிய தரமான கட்டுரைகளுடன், கனடியத் தமிழரின் தரத்தைப் புலப்படுத்தும் ஆவணமாக ஆண்டு மலர் வெளிவரும்.

புலம்பெயர்ந்து வாழும் நாடுகளிலுள்ள தமிழர்களும் தாயகத்து உறவுகளும் பெருவிருப்புடன் வாசித்து, பவுத்திரமாகச் சேகரித்து வைக்கும் களஞ்சியமாகவும், தாயகப் பல்கலைக்கழக நூலகங்களில் வரலாற்று/உசாத்துணைக்கு உதவும் வெளியீடாகவும் 'தமிழர் தகவல்' மிளிர்ந்து வருவதை அங்கிருந்து அவ்வப்போது கிடைத்து வரும் மீள்ஊட்டு வாயிலாக அறிந்து வருகின்றோம்.

அடுத்து வருகின்ற மாதங்களில் மலர் தொடர்பான மேலும் பல விபரங்களை அறியத்தருவோம்.

# விடுதலைப் புலிகளுடன் தொடர்புள்ளதென்று கனடிய அரசு சந்தேகம் வெளியிட்டதால் கப்பலில் வந்தவர் அகதியாக ஏற்கப்பட்டார்!

## "நாடு கடத்தினால் இலங்கையில் ஆபத்தை எதிர்கொள்வார்" அகதிகள் விசாரணைச் சபையின் தீர்ப்பில் விளக்கம்

முள்ளிவாய்க்கால் பின்னடைவுக்குப் பின்னர், கனடாவுக்கு ஈழத்தமிழர்களைச் சுமந்து வந்த முதலாவது கப்பல் 'ஓஷன் லேடி'. 2009 அக்டோபரில் வன்கூவர் வந்து சேர்ந்த இக்கப்பலில் 76 பேர் இருந்தனர்.

இந்தக் கப்பலை விடுதலைப் புலிகளுடன் தொடர்புடையதென்றும், இதில் வந்தவர்களில் ஒது பகுதியினர் அவர்களுடன் தொடர்புடையவர்களென்றும் கனடிய அரசு சொல்லி வந்தது. இதனால் பல நாட்களுக்கு இவர்கள் வன்கூவரில் தடுத்து வைக்கப்பட்டிருந்தனர்.

கனடாவின் பல்வேறு ஊடகங்களும் கப்பலில் வந்த தமிழர்களை, அவர்கள் எத்துணை துன்பங்களை அனுபவித்தவர்கள் என்றும் பாராமல், அவர்கள் 'புலிகளின் ஆட்கள்' என்று பகிரங்கமாக குற்றஞ்சாட்டி வந்தன. இதனால் இவர்களின் அகதிக்கோரிக்கைக்குப் பாதகமான தீர்ப்பே கிடைக்கலாமென அஞ்சப்பட்டு வந்தது.

ஆனால், சற்றும் எதிர்பார்க்காத வகையில், இவர்களில் ஒருவரின் அகதிக்கோரிக்கை கடந்த மாதம் ஏற்கப்பட்டது. இவர் வந்த கப்பலுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் தொடர்பிருக்கலாமென தெரிவிக்கப்பட்ட குற்றச்சாட்டின் காரணத்தால், இவரை இலங்கைக்கு நாடு கடத்தினால், இவர் துஷ்பிரயோகம் செய்யப்பட்டு ஆபத்து ஏற்படலாமென்று காரணம் காட்டி இவரின் கோரிக்கையை அகதிகள் விசாரணைச் சபை ஏற்றுள்ளது.

கடந்த மூன்று வருடங்களாக, கப்பலில் வந்த தமிழ் அகதிகளை புலிகள் என்றும், புலிகளின் ஆட்கள் என்றும் 'ஓஷன் லேடி' கப்பல் புலிகளுக்கு ஆயுதங்களைக் கடத்திய கப்பல் என்றும் பலவேறு குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்ட வேளையில், அந்தக் குற்றச்சாட்டே ஒருவருக்கு அகதியுரிமையை வழங்க வழிவகுத்தது என்று அகதிகளுக்கான கனடிய வழக்கறிஞர் ஒருவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

2010ஆம் ஆண்டில் 'சன் சீ' கப்பலில் வன்கூவர் வந்த 492 ஈழத்தமிழர்களையும் புலிகளின் ஆட்கள் என்று கனடிய குடிவரவு இலாகாவினர் குற்றஞ்சாட்டி வரும் வேளையில், அகதிகள் விசாரணைச் சபையின் இந்தத் தீர்ப்பு அரசுக்கு ஒரு சவாலாக அமைந்துள்ளது.

இந்தத் தீர்ப்பானது கப்பல்களில் வந்து அகதியுரிமை கோரியுள்ள அனைவரையும் ஏற்கச் செய்து விடுமோ என்று கனடிய மத்திய அரசு மிரளுகிறது. இதனால், இந்தத் தீர்ப்பை ஆட்சேபித்து மேன்முறையீடு செய்வது பற்றியும் குடிவரவு இலாகா ஆலோசித்து வருகின்றது. "நிலைமையை ஆராய்ந்து வருகிறோம்" என்று பட்டும் படாமல் ஒரு அதிகாரி கருத்து வெளியிட்டுள்ளார்.

மறுபுறத்தில், 'சன் சீ' கப்பலில் தமிழர்களைக் கனடாவுக்குக் கொண்டு வந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் கைதாகித் தடுத்து வைக்கப்பட்டிருந்த இருவரும் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர். கடந்த ஜூன் மாதத்தில் கைதான இவர்கள் வன்கூவர் நீதிமன்றில் ஆஜர் செய்யப்பட்டனர்.

தம்பிநாயகம் ராஜரட்ணம், நடராஜா மகேந்திரன் ஆகிய இருவரையும் வெளியே எங்கும் செல்லக் கூடாதென உத்தரவிட்டுள்ள நீதிபதி, அவர்களின் கடவுச் சீட்டுகளை ஒப்படைக்குமாறு கோரியுள்ளார்.

'சன் சீ' கப்பலில் வந்தவர்களில் ஆறு பேர் மட்டுமே அகதிகளாக இதுவரை ஏற்கப்பட்டுள்ளனர். 19 பேருக்கு நாடுகடத்தல் உத்தரவு வழங்கப்பட்டுள்ளது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ரஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

ஒன்ராறியோவில் இளையோர் மத்தியில் அதிகரித்து வருகின்ற குற்றச்செயல்களைத் தடுப்பதற்கான செயற்திட்டங்களுக்கு மாகாண லிபரல் அரசாங்கம் உடனடியாக இருபது மில்லியன் டாலர்களை ஒதுக்கியுள்ளது. வீதிகளில் தாராளமாகப் புழக்கத்திலிருக்கும் துப்பாக்கிகளை ஒழித்துக்கட்டுவதே இதன் முதல் நோக்கம். இளையோர்களுடன் இணைந்து பணியாற்றுவதற்கென 35 வெளிச் சேவையாளர்கள் இத்திட்டத்தின்கீழ் நியமிக்கப்படவுள்ளனர். இவர்களுள் இருபது பேர் ரொறன்ரோவில் பணியாற்ற நியமிக்கப்படுவர். ஸ்காபரோ மோனிங்சைட் பகுதியில் இரு மாதங்களுக்கு முன்னர் நடைபெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தல இருவர் மரணமாக, பலர் காயமடைந்தனர்.

தங்கள் பிள்ளைகள் கடுமையாக நோய்வாய்ப்பட்டிருக்கும் காலத்தில் அவர்களோடு தங்கியிருந்து அவர்களைக் கவனிக்க விரும்பும் பெற்றோருக்கு வேலைக் காப்புறுதிக் கொடுப்பனவு (Employent Insurance) வழங்க கனடிய மத்திய அரசு முன்வந்துள்ளது. இந்த உறுதிமொழி கடந்த பொதுத்தேர்தலின் போது ஸ்டீபன் ஹாப்பரால் வழங்கப்பட்டிருந்தது. 2013 ஜுன் மாதத்திலிருந்து இந்தத் திட்டம் அமுலுக்கு வரும். ஒருவர் ஆகக்கூடியதாக ஒன்பது மாதங்களுக்கு இக்கொடுப்பனவைப் பெறக்கூடியதாக இருக்குமென்று தெரியவந்துள்ளது. வருடமொன்றுக்குச் சுமார் ஆறாயிரம் பெற்றோர் இதனால் நன்மையடைவரென மதிப்பிடப்பட்டுள்ளது.

2014ஆம் ஆண்டு நடைபெறவுள்ள ரொறன்ரோ நகரசபைத் தேர்தலில் மேயர் பதவிக்கு ஒலிவியா சோ போட்டியிடலாமென்று அடிபடும் செய்திகளுக்கு அவர் முற்றுப்புள்ளி வைத்துள்ளார். தற்போது ஸ்பைடினா தொகுதியின் நாடாளுமன்ற உறுப்பினராகவிருக்கும் இவர், அதற்கு முன்னர் ரொறன்ரோ நகரசபையின் உறுப்பினாராகவிருந்தவர். ஜாக் லேட்டனின் மனைவியான இவர் தற்போதைய மேயர் றொப் போர்ட்டை எதிர்த்துப் போட்டியிட்டால் நிச்சயம் வெற்றி பெறுவார் என்று கருத்துக் கணிப்புகள் தெரிவித்துள்ளன. ஆனால், மேயர் பதவிக்குத் தாம் போட்டியிடப் போவதில்லையென்று ஒலிவியா சௌ உறுதிபடத் தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மாதங்களில் கனடாவின் உணவுப் பொருட்களின் விலை அதிகரிக்கலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளதாயினும் ஏற்கனவே இந்த அதிகரிப்பைக் காணக்கூடியதாகவுள்ளது. சராசரியாக மூன்றரைச் சதவீதம் வரையில் விலை அதிகரிப்புச் செல்லலாமென்று எதிர்வு கூறப்படுகின்றது. ஆனால் நான்கு சதவீதத்துக்கு அதிகரிக்கலாமென கனடிய றோயெல் வங்கி எச்சரித்துள்ளது. அமெரிக்காவில் நிலவும் வரட்சி காரணமாக கனடாவில் விலை அதிகரிப்பு ஏற்படுகின்றது. சோயா பயிர்ச்செய்கை வெகுவாகப் பாதிக்கப்படுவதால் மாடுகள் மற்றும் பன்றிகளுக்கான கால்நடைத் தீனி தயாரிப்பு வெகுவாகப் பாதிக்கப்படுமென்பதும் இங்கு குறிப்பிடப்படவேண்டியது

ரொறன்ரோவின் மேற்குப் பகுதியில் குப்பைகளை அகற்றும் பணியைத் தனியார் நிறுவனமொன்று கடந்த மாதத்திலிருந்து பொறுப்பேற்றுள்ளது. சுமார் ஒரு லட்சத்து அறுபத்தையாயிரம் வீடுகளின் குப்பைகளை குறிப்பிட்ட தனியார் நிறுவனம் அள்ள ஆரம்பித்துள்ளது. முதல்மாதச் செய்திகளின்படி பல நூற்றுக்கணக்கான வீடுகளின் குப்பைகள் அள்ளப்படவில்லையென்று புகார் செய்யப்பட்டுள்ளது. இந்த மாதத்தில் இவ்வாறான பிரச்சனைகள் தீர்க்கப்பட்டு விடுமென்று ரொறன்ரோ நகரசபை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். யங் வீதியிலிருந்து மேற்கே கம்பர் றிவர் வரையான பகுதியிலுள்ள வீடுகள் முதற் கட்டமாக தனியாரிடம் வழங்கப்பட்டுள்ளது.

கனடியர்கள் அமெரிக்கா சென்று கொள்வனவு செய்துவரும் பொருட்களுக்கான வரியில் சிறு சலுகையை அமெரிக்கா கடந்த மாதம் வழங்கியதையடுத்து, அங்கு சென்று வரும் கனடியர் தொகை வெகுவாக அதிகரித்துள்ளது. இதனால், அமெரிக்க மக்கள் தமக்குத் தேவையான பொருட்களைக் கொள்முதல் செய்வதற்கு நீண்ட வரிசையில் நிற்பது, அதிக நேரத்தைச் செலவிடுவது போன்றவற்றால் கடும் சீற்றமடைந்துள்ளனர். அமெரிக்காவின் சில நகரங்களில் கனடிய இலக்கத் தகடுகளுடனான வாகனங்கள எப்போதும் ஆக்கிரமித்திருப்பதாக இவர்கள் குறை கூறுகின்றனர். பால், மற்றும் எரிபொருள் என்பவற்றைக் கனடியர்கள் அதிகளவில் கொள்முதல் செய்கின்றனராம்.

## தமிழரை இலக்கு வைக்கும் நகைக் கொள்ளைகள்

ஸ்காபரோ பகுதியில் அண்மைக் காலங்களில் கொள்ளைகள் அதிகரித்து வருவதாக பொலிசார் அறிவித்துள்ளனர். இந்தக் கொள்ளைகள் தொடர்பான விசாரணையில் இரண்டு விடயங்கள் தெரியவந்துள்ளது. தமிழர்களை இலக்கு வைத்தே கொள்ளைகள் இடம்பெறுவது என்பது முதலாவது. தங்க நகைகளே கொள்ளையர்களின் இலக்கு என்பது இரண்டாவது.

கடந்த மாதத்தில் இடம்பெற்ற பல கொள்ளைகளும் மேற்சொன்ன வகையானவை. ஸ்காபரோவில் பட்டப்பகலில் ஒரு இளம் குடும்பத்தவர் வீட்டுக்குள் புகுந்த கொள்ளையர் அங்கிருந்த குழந்தையில் தலையில் துவக்கை வைத்து மிரட்டி, நகைகளைக் கொள்ளையடித்துள்ளனர். ஒரு தொடர்மாடிக் கட்டடத்தின் சலவை அறையில் நின்ற பெண்ணின் கழுத்திலிருந்து சங்கலி பறித்துச் செல்லப்பட்டுள்ளது. வீதியில் நடந்து செல்லும் பெண்களின் நகைகள் பறிக்கப்பட்ட சம்பவங்கள் பல இடம்பெற்றுள்ளன. ஸ்காபரோ கிழக்கிலுள்ள நகைக்கடையொன்றில் இரவு நேரத்தில் பல லட்சம் டாலர் பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டுள்ளது. மிசிசாகாவில் கடந்த இரண்டாண்டுகளில் தமிழருக்குச் சொந்தமான இரண்டு நகைக்கடைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

இக்கொள்ளைகளைத் தடுக்க பொதுமக்களின் உதவியை பொலிஸார் கோரியுள்ளனர். முக்கியமாக, நகைகளை வீடுகளில் வைத்திருக்க வேண்டாமென்றும், வெளியில் செல்லும்போது இவைகளை அணிந்து செல்வதைத் தவிர்க்குமாறும் ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது.

## கனடிய நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கை 338 ஆக அதிகரிப்பு

தற்போது 308 ஆகவுள்ள கனடிய நாடாளுமன்ற தொகுதிகளின் எண்ணிக்கையை முப்பதால் அதிகரித்து, மொத்தத் தொகையை 338 ஆக்க நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. இதில் 15 ஒன்ராறியோ மாகாணத்துக்குக் கிடைக்கும். ரொறன்ரோ, மார்க்கம், பிராம்டன், டுர்ஹம் ஆகிய பகுதிகளுக்கு தலா இரண்டு தொகுதிகள் புதிதாகக் கிடைக்கும். மிசிசாகா, ஓக்வில், யோரக், கேம்பிரிட்ஜ், ஹமில்ரன், ஒட்டாவா, சிம்கோ பகுதிகளுக்கு தலா ஒன்று கிடைக்கும். மிகுதிப் பதினைந்தில் பிரிட்டிஷ் கொலம்பியாவுக்கு ஆறும், அல்பேர்ட்டாவுக்கு ஆறும், கியுபெக்கிற்கு மூன்றும் கிடைக்கும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# றொறன்ரோ மேயர் ஃபோர்ட் எப்போதும் செய்தியின் முன்னணியில்!



ஓர் அரசியல்வாதியின் எதிர்காலம் ஒளிமயமாவதற்கும், அவர் தொடர்ந்து மக்கள் மத்தியில் பிரகாசிப்பதற்கும் அவருக்கு 'ஊடக ராசி' இருக்க வேண்டுமென்று சொல்வார்கள். புகழ்ச்சியான செய்திகளைவிட விமர்சனப் பாங்கான செய்திகளே அரசியல்வாதிகளை பிரபல்யாக்கும் தன்மை வாய்ந்தது. றொறன்ரோவின் தற்போதைய மேயர் றொப் ஃபோர்ட் இதற்கான நிகழ்கால உதாரணம்.

மேயர் பதவிக்கு வந்து இரண்டாண்டுகளை அவர் முடிக்கப் போகின்றார். 2014 நவம்பரில் நடைபெறவுள்ள மேயர் தேர்தலுக்கும் தம்மைத் தயாராக்கி வருகின்றார். அதிரடியாக இவர் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் இவரை எப்போதும் செய்தியின் முன்னணியில் நிறுத்தி வருகின்றது.

றொறன்ரோ மக்கள் அவர்களது வாகனங்களுக்கு வருடாந்தம் செலுத்தி வந்த அறுபது டாலர் வரியை நீக்கியதால் பிரசித்தமான றொப் ஃபோர்ட், மற்றைய விடயங்கள் பலவற்றில் சர்ச்சைக்குரியவராகவே இருந்து வருகிறார். இதனால் றொறன்ரோவின் பிரதான ஊடகங்களில் மட்டுமன்றி, சமூக ஊடகங்களிலும் கடுமையாக விமர்சிக்கப்பட்டு வருகின்றார்.

ஊடகக்காரர்களுடன் மோதுவது, விருப்பம் கலந்த முரண்பாடான நடவடிக்கைகளில் ஈடுபடுவது, போக்குவரத்து விதிகளை அசட்டை செய்வது, தொழிற்சங்கங்களுடன் கடும்போக்கைப் பேணுவது என்று பல்வேறு செய்திகள் இவர் சம்பந்தப்பட்டதாக வருவதை அவதானிக்க முடிகின்றது. நகர வரியிறுப்பாளர் ஒருவருக்காக சட்ட நிறுவனமொன்று தாக்கல் செய்த வழக்கில் செப்டம்பர் ஐந்தாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு இவர் பணிக்கப்பட்டுள்ளார். வழக்கு விசாரணை பகிரங்கமாக நடைபெறுமென்று தெரியவந்துள்ளது.

தமது பணிக்குச் செல்வதற்கான வாகனத்தை தாமே ஓட்டிச் செல்வதில் இவருக்குப் பெருவிருப்பம். கடந்த மாதத்தில் ஒருநாள் போக்குவரத்து நெரிசலான றொறன்ரோ வீதியொன்றில் வாகனத்தை ஒரு கையால் ஓட்டியவாறு, மறுகையால் எதனையோ வாசித்துக் கொண்டு செல்கையில், மற்றொரு வாகனத்தில் பயணம் செய்த ஒருவர் இதனைப் படமெடுத்து தமது சமூக இணையத்தில் தரவிறக்கம் செய்துவிட்டார்.

ஊடகங்கள் அதனை ஊதிப் பெருப்பித்தன. "அன்றைய முக்கியமான கூட்டமொன்று சம்பந்தமான படிவங்களைப் படித்தேன்" என்பது அவரது வாதம். நகர மேயர் என்கின்ற வகையில் ஒரு சாரதியை நகரசபைச் சம்பளத்தில் நியமிக்க இடமுண்டு. வரியிறுப்பாளர் பணத்தை வீணாக்க விரும்பவில்லையென்று கூறி சாரதியை ஏற்க மறுத்துவிட்டார். அதுமட்டுமன்றி, இவ்வருடத்தில் தமக்கு வழங்கப்பட்ட சம்பள உயர்வையும் ஏற்க இவர் மறுத்துவிட்டார். வருடாந்தம் மேயருக்கென ஒதுக்கப்படும் பணத்தில் பெரும்பகுதியை மீதப்படுத்துவதில் முதலிடம் வகிக்கின்றார்.

எஞ்சியுள்ள பதவிக்காலத்தில் (இரண்டு வருடங்கள்) இவருடைய செயற்பாடுகள் எவ்வாறிருக்குமென்பதைப் பொறுத்தே, அடுத்த தேர்தல் முடிவுகள் அமையும். இதற்காகவே றொறன்ரோவில் சில ஊடகங்கள் காத்திருக்கின்றன. அதே ஊடகங்களுக்குத் தினசரி தீனி (செய்தி) போடும் ஓர் அரசியல்வாதியாகவும் இவரே விளங்கி வருகின்றார்.

# கனடிய 'பெனி'யின் ஆயுள் 2013 பெப்ரவரி வரை நீடிப்பு




கனடிய 'பெனி'யின் (ஒரு சதம்) ஆயுள் இவ்வாண்டின் இலையுதிர் காலத்துடன் முடியுமென்று முன்னர் அறிவிக்கப் -பட்டிருந்ததாயினும், இதனை அடுத்தாண்டு பெப்ரவரி மாதம் நான்காம் திகதி வரை கனடிய அரசு நீடித்துள்ளது. இதன்படி, 'பெனி'யின் பாவனை அன்றைய தினத்துடன் நிறுத்தப்பட்டு விடுமா என்ற கேள்வி மக்களிடம் எழுந்துள்ளது.

பொதுமக்களிடமுள்ள 'பெனி' கனடிய வங்கிகளுக்கு மீளச் சென்றடையும் வரை அது பாவனையிலிருக்கும். ஆனால், 'பெனி' ஒருபோதும் மக்களின் கைகளுக்கு திரும்பிவராது.

எதற்காக 'பெனி'யின் பாவனையை அரசு நிறுத்துகின்றது, இதனால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் என்ன என்பதை இங்கு பார்க்கலாம்.

ஒரு சதம் என்றழைக்கப்படும் ஒரு 'பெனி'யைத் தயாரிப்பதற்கு ஏற்படும் செலவு 1.6 சதம். வருடமொன்றுக்கு பதினொரு மில்லியன் டாலர்களை 'பெனி' தயாரிப்புக்கு அரசு செலவிடுகின்றது. ஆனால், பொதுமக்களிடம் சென்றடையும் 'பெனி'யில் பெருமளவானது திரும்பி வருவதில்லை. கண்ணாடிப் பேழைகள், சூஜாக்கள், மீன் தொட்டிகளில் 'பெனி' சேகரிப்பதையே மக்கள் விரும்பி அவ்வாறே செய்கின்றனர்.

தற்போது இருபது பில்லியன் (20 billion) 'பெனி'கள் பாவனையிலுள்ளன. இதன் பெறுமதி 200 மில்லியன் ஆகும்.

'பெனி'யை ரத்துச் செய்வதால் கனடிய பொருளாதாரம் பாதிக்கப்படமாட்டாதென்றும், பொருட்களின் விலை அதிகரிக்காதென்றும் அறிவிக்கப்பட்டுள்ளது. ஆனால், பொருட்களின் விலைகளில் சில மாற்றங்கள் ஏற்படலாம். உதாரணமாக ஒரு சதம் அல்லது இரண்டு சதமாக கூட்டுத்தொகை வரும் பொருட்களின் விலை, 00 ஆக மாறும். அதேசமயம் மூன்று அல்லது நான்கு சதமாக முடியும் பொருட்களின் விலை 05 ஆக மாறும். இது போலவே ஆறு, ஏழு சதப் பொருட்களும் மற்றும் எட்டு, ஒன்பது சதப் பொருட்களும் முறையே ஐந்து மற்றும் பத்துச் சதங்களாக மாற்றம் பெறும். சில நாட்களுக்கு நுகர்வாளர்கள் இதனால் சிறிய பிரச்சனைகளைச் சந்திக் நேரிடும்.

'பெனி'யின் பாவனை முடிவுக்கு வருகின்றதாயினும், காசோலை மற்றும் மணிஓடர் போன்றவைகளில் 'பெனி' ரத்தாகமாட்டாது.

பெருமளவில் 'பெனி'களை வைத்திருப்பவர்கள் அவைக-ளை வங்கிகளில் கொடுத்து அதற்குரிய பணத்தைப் பெறலாம். அல்லது தர்ம நிறுவனங்களுக்கு நன்கொடையாகக் கொடுக்கலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் து. சூரியபாலன்

# சந்தேக நோய்க்கு தகுந்த சிகிச்சையுண்டு
# TREATMENT FOR PARANOIA

## இத்தொடரின் இறுதிப் பகுதி

எமது ஈழமக்களிடையிலும் இந்த மாதிரியான ஒரு நம்பிக்கை உண்டு, அதை செய்வினை, சூனியம் என்று கூறுகின்றார்கள் என்று குறிப்பிட்டோம். இப்படிப்பட்ட பயந்த மனோநிலையில் எதைச் செய்தாலும் எங்களுடைய சந்தேகம் உள்ள மனம் பிழையான அர்த்தத்தையே கூறுகின்றது. இதன் விளைவு, நண்பர்களையும், உறவினர்களையும் பகைத்தல், மேலும் தனிமையான வாழ்க்கை வாழுதல் என்றும் கூறினோம். அடுத்ததாக இரண்டாவது உதாரணமாகக் கூறிய 30 வயது ஆண் Canadian பற்றி விளக்குவோம்.

இவர் பல வருடங்கள் Coccaine என்ற Street drug ஐ பாவித்தும், அதை விற்பவர்களோடு சகவாசம் செய்து இருந்தாலும் இந்தத் தீய பழக்கத்தை ஆண்டவன் அருளால் விட்டு விட்டு நல்வாழ்க்கை நடத்திக் கொண்டு வந்தார் என்று கூறினோம். எப்படியிருந்தாலும் இந்த Coccaine விற்பவர்கள் தன்னை ஒரு நாள் கண்டு பிடித்துக் கொலை செய்யப் போகின்றார்கள் என்று எண்ணிப் பயந்தார். இவர் அப்படி எண்ணிப் பயப்படுவதற்குக் காரணங்களும் உண்டு, ஏனெனில், அப்படிப்பட்ட சம்பவங்களை அவர் மற்றவர்கள் கூறக் கேட்டிருக்கின்றார். அதேவேளையில் அவர் Coccaine பாவித்ததைத் தவிர, இந்த Coccaine விற்பவர்களோடு ஒரு முரண்பாட்டிற்கும் போகவில்லை. அப்படி இருந்தாலும் தனது உயிருக்கு ஆபத்து வரப்போகின்றது என்று சந்தேகப்படத் தொடங்கினார். இந்தச் சந்தேகம், பின்பு தன்னை யாரோ எந்த நேரமும் தொடர்கின்றார்கள் என்ற முடிவுக்கு வரச் செய்தது. இதன் விளைவால் அவர் வீட்டிற்குள் அடைபட்டுக் கிடந்தது மாத்திரமன்றி, 2-3 மாதத்திற்கு மேல் ஒரு மாகாணத்தில் இருக்க மாட்டார். British Columbia, Manitoba, Toronto, Quebec என்று தன்னால் உண்டாக்கப்பட்ட கொலைஞர்களில் இருந்து தப்பியோடத் தொடங்கினார். இப்படி ஓடிக் களைத்து, இறுதியில் சிகிச்சை பெறச் சம்மதித்தார். இங்கு வாசகர்கள் நினைவில் வைக்க வேண்டியது என்னவென்றால் இந்த ஆண் மகனின் அனுபவங்களும், தனிமையான வாழ்க்கையும், பயந்த மனமும் இவை எப்படி அவருடைய மனதில் சந்தேகத்தை உண்டாக்கியதும் என்பதே.

இதே மாதிரியாக இந்தச் சந்தேகம் என்ற மனப் பேயோடு, தாழ்ந்த மனப்பான்மையும், பயமும், தன்னில் நம்பிக்கையும் குறைந்ததால் மூன்றாவது உதாரணமாகக் கூறிய 27 வயதுள்ள ஆண்மகன், தன்னுடைய மனைவியை வீணாகச் சந்தேகித்து மணவாழ்க்கையை மிகவும் துக்ககரமாகவும், வெறுப்புள்ளதாகவும் மாற்றிக் கொண்டு வந்தார்.

ஆண்டவன் அருளால் இவர்கள் எல்லோரும் தகுந்த சிகிச்சை பெற்று, நல்வாழ்க்கை வாழ்ந்து கொண்டு வருகின்றார்கள். ஆபிரிக்கப் பெண்மணியின் Voo Doo இருந்த இடம் தெரியாமல் போய்விட்டது. வீட்டை விட்டு வெளியே செல்லப் பயந்த 30 வயது ஆண் இப்போது மணம் செய்து, நல்ல வேலை பார்க்கின்றார். மூன்றாவதாகக் கூறிய 27 வயது ஆண்மகன் மனைவியுடன் சந்தோஷமாக வாழ்க்கை நடத்துகின்றார். ஆகவே அடுத்ததாக இந்தப் Paranoia என்ற வருத்தத்துக்கு என்ன சிகிச்சைகள் இருக்கின்றன என்பதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள்.

இந்த மாதிரியான மனோநிலை ஏற்படும் வேளையில், எங்களுடைய மூளையில் (Brain) சில Neuro-chemical changes அதாவது ரசாயன மாற்றங்கள் ஏற்படுகின்றன. முன்பு Depression என்ற வருத்தத்தைப் பற்றி எழுதும் பொழுது, இந்த மாதிரியான Neuro-chemical changes ஏற்படுகின்றன என்று கூறினோம். எங்களுடைய மூளையில் எத்தனையோ விதமான Neuro-chemicals உள்ளன. Depression என்ற வருத்தத்தால் ஏற்படும் Chemical changes ஐ மாற்றுவதற்கு Antidepression என்ற மருந்தைப் பாவிக்கின்றோம். Paranoia என்ற வருத்தத்தால் ஏற்படும் Neuro-chemical changes வேறுபட்டதாக இருக்கின்றது. இந்த மாற்றத்தை பழைய நிலைமைக்கு கொண்டு வருவதற்கு Anti Psychotics என்ற மருந்து வகையை பாவிக்கின்றோம்.

சாதாரணமாக ஏற்படும் மனப்பயத்திற்கு மருந்து தேவையில்லை. தகுந்த ஆறுதலும், ஆதரவும் தான் அவற்றுக்கு மருந்து. ஆனால் Paranoia ஆல் ஏற்படும் சந்தேகம் சாதாரணமாக ஏற்படும் சந்தேகத்திலும் பார்க்க 100 மடங்கு கூடியதாகவும், விசித்திரமாகவும் இருக்கின்றது. இப்படிப்பட்ட Paranoia ஆல் உண்டாகும் சந்தேகத்தை வார்த்தைகளால் கதைத்து சுகப்படுத்த முடியாது. இதற்கு காரணம் எங்களுடைய மூளையில் ஏற்படும் Neuro-chemical changes, எங்களுடைய மனதை எத்தனையோ விதமாக எண்ணுவதற்கு தூண்டுகின்றது. ஆகவே தான் Anti Psychotic மருந்து எடுப்பது முக்கியம் என்று கூறுகின்றோம். இந்த மருந்து எடுப்பதோடு மாத்திரம் இல்லாது, Psychotherapy, Martial therapy போன்றவையும் இணைத்துப் போவதால் சிகிச்சை பூரணமாகின்றது.

கடைசியாக இப்படிப்பட்ட Paranoia வருவதைத் தடுப்பதைப் பற்றி ஒரு சில வார்த்தைகள் கூறி இந்தக் கட்டுரையை முடிவு செய்யலாம் என்று நினைக்கின்றேன். Paranoia என்ற வருத்தத்திற்கு வித்தாக இருக்கும் தனிமையான வாழ்க்கையை அதாவது Social isolation ஐ இயன்றளவு தவிர்க்க வேண்டும். எங்களில் சிலர் தொடர்ந்து இந்த மாதிரியாக வாழ்கின்றார்கள். சில வேளைகளில் இந்த மாதிரியான வாழ்க்கை தேவையில்லாத மனப்பயத்தையும் சந்தேகத்தையும் உண்டாக்குகின்றது. நாங்கள் எல்லோரோடும் எப்போதும் பழக முடியாது. அதேவேளையில் சிலரோடாவது பேசிப் பழகி வந்தால், இந்த மாதிரியான சமூகத் தனிமையைத் (social isolation) தவிர்க்கலாம். நேரம் இருக்கும் வேளைகளில் Church, கோயில் போன்ற இடங்களுக்குப் போகலாம். இயலுமானால் கலாசார நிகழ்ச்சிகளைக் கண்டு களியுங்கள். நண்பர்கள், உற்றார், உறவினரோடு தொலைபேசி மூலமாவது தொடர்பாக இருங்கள்.

அடுத்ததாக மனதில் பயம் ஏதும் இருந்தால் அதை உங்கள் கணவரோடோ, மனைவியோடோ அல்லது உங்களுக்கு நம்பிக்கையான ஒருவரோடு கதைத்துத் தீர்க்கப் பார்க்க வேண்டும். நாங்கள் நினைத்துப் பயப்படுவது, மற்றவர்களின் கண்ணோக்கில் வீண் கற்பனையாக இருக்கலாம். இதை மற்றவர்கள் எங்களுக்கு வலியுறுத்திக் கூறுவதால், எங்களுடைய சந்தேகமும், வீண் மனப் பயமும் தீரக்கூடும். கணவர், மனைவி ஒருவரோடு ஒருவர் அன்பாகவும் ஆதரவாகவும் நம்பிக்கையோடும் ஒருவருக்கு ஒருவர் விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையோடும் பழக வேண்டும். தங்களுக்குள் இருக்கும் பிரச்சனைகளைக் கதைத்துத் தீர்க்க வேண்டும். அப்படிச் செய்யாவிட்டால் சந்தேகம் என்னும் சிறிய வித்து முளைத்துப் பெரிய மரமாகிவிடும்.

உங்களுக்கு மேற்கூறிய Paranoia என்ற வருத்தத்தால் யாராவது துன்பப்படுகிறார்கள் என்று அறிந்தால், அவர்கள் குடும்ப வைத்தியர் மூலமாக Psychiatrist ஐக் கண்டு சிகிச்சை பெற உதவுங்கள்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கனகேஸ்வரி நடராஜா

# Literacy Skills and Summer Set Back

# எழுத்தாற்றல் திறனும் கோடை விடுமுறை பின்னடைவும்

கோடை விடுமுறை என்றவுடன் முழுதாக இரண்டு மாத விளையாட்டும், ஓய்வும் எனத்தான் மாணவர்கள் நினைக்கிறார்கள். பல வீடுகளில் விடுமுறையில் பிள்ளைகள் புத்தகத்தையே தொடுவதில்லை. September மாதத்தில் பல விடயங்களை மறந்த நிலையில்தான் அதிகமான பிள்ளைகள் திரும்பி வருவார்கள். சில பெற்றோர்களும் விடுமுறையை பிரயோசனமாகப் பிள்ளைகள் கழிப்பதற்கு வேண்டிய உதவிகளை வழங்குவதில்லை. ஏதோ இரண்டு மாதங்கள் விளையாடவும், உலாத்தவும், நண்பர்களோடு அரட்டை அடிக்கவும் சந்தர்ப்பம் கிடைத்ததாகவே பிள்ளைகள் கருதுகிறார்கள். ஆனால் இதன் காரணமாகவே பத்து ஆண்டுகளுக்கு முன்பு 3ம், 6ம், 10ம் வகுப்புகளில் மாகாண ரீதியாக எழுத்தறிவுப் பரீட்சைகள் ஆரம்பிக்கப்பட்டு அவற்றில் மாணவர்கள் கட்டாயம் சித்தியடைய வேண்டும் என்ற கொள்கையும் அமுல்படுத்தப்பட்டு அதில் பெரும் முன்னேற்றமும், வெற்றியும் கண்டுள்ளனர். பொதுவாக மொழித்திறன் என்பது ஒரு சில நாட்களில் கிரகிக்கக்கூடிய ஒன்றல்ல. இன்னொருவர் சொல்லிக் கொடுப்பதன் மூலமோ, பிரத்தியேக வகுப்புகளுக்குச் செல்வதன் மூலமோ (Tuitions) பெறக்கூடிய திறனல்ல. ஒவ்வொரு பிள்ளையும் சுயமுயற்சி மூலம் எவ்வளவு தூரத்திற்கு வாசிப்பில் ஈடுபடுகிறார்களோ (Reading) அவ்வளவு தூரத்திற்கு முன்னேற்றம் காண்பார்கள். மொழி என்பது பிள்ளைகளோடு சேர்ந்து வளரும் ஒரு திறனாகும் (Language grows with the child). இதனால்தான் மாணவர்கள், பெற்றோர்கள், ஆசிரியர்கள் எல்லோரும் ஒன்றிணைந்து மொழி அறிவை விருத்தி செய்யும் வகையில் வாசிப்புப் பழக்கத்தை வளர்த்தல் வேண்டும். பாடசாலை நாட்களில் நேரம் இல்லை என்ற ஒரு நொண்டிச் சாட்டை மாணவர்கள் கூறுவார்கள். ஆனால் கோடை விடுமுறையில் வாசிப்புக்குப் பெரிதும் அவகாசம் உண்டு. பேற்றோர்கள் கவனத்தில் கொள்ள வேண்டிய முக்கிய விடயம் யாதெனில் பிள்ளைகள் மிகவும் சிறுவயதிலேயே வாசிப்புப் பழக்கத்தில் ஈடுபடுத்தப்பட வேண்டும். நாட்கள் செல்லச் செல்ல அவர்கள் தாமாகவே வாசிப்பில் மூழ்கி விடுவார்கள். சிறுவயதில் அக்கறை எடுக்காமல் இருந்துவிட்டு, ஒரு 10, 12 வயதிற்கு பின்பு இவர்களை வாசிக்கச் செய்ய முடியாது.

எழுத்தறிவுக்கும், பெற்றோரின் சமூக, பொருளாதார அறிவுக்கும் இடையே நெருங்கிய தொடர்பு இருப்பதாக அண்மையில் வெளியான ஓர் ஆய்வு அறிக்கை காட்டுகிறது. Ontario Literacy, and Numeracy Secretariat ஓர் பாரிய ஆய்வினை எழுத்தறிவு சம்பந்தமாக நடத்தி இத்தகைய ஒரு திடுக்கிடும் தகவலை வெளியிட்டுள்ளது. பெற்றோரின் சமூகப் பொருளாதாரப் பின்னணியில்தான் ஒரு மாணவனின் எழுத்தாற்றல் தங்கியுள்ளதா என்ற கேள்வி ஏற்படலாம்? இது ஒன்றும் புதிதல்ல. படித்த பொருளாதார உயர்மட்டத்தில் உள்ள வீடுகளில் பிள்ளைகளைச் சுற்றி எத்தனையோ சஞ்சிகைகள், புத்தகங்கள் காணப்படும். அத்துடன் பெற்றோரும், தமக்கிடையில் மாத்திரம் அல்லாது, பிள்ளைகளோடும் பல விடயங்களைப் பற்றி கலந்துரையாடுவார்கள். ஆகவே வசதி படைத்த வீட்டுப் பிள்ளைகளுக்கு எழுத்தறிவை அதிகரிப்பதற்கான சந்தர்ப்பங்கள் தாராளமாகக் காணப்படுகின்றன (Exposure). ஆனால் சமூகப் பொருளாதார பின்னணியில் உள்ள குடும்பங்களில் நாளாந்தம் பிள்ளைகள் பார்க்கும், கேட்கும் விடயங்கள் யாவும் சாதாரண சம்பாஷணைகளாகவே உள்ளன (not sophisticated).

கோடை விடுமுறை பின்னடைவு (Summer setback) என்ற ஒரு ஆய்வு கனடாவிலேயே இதுவே முதல்முறையாக இத்தகைய பாரியளவில் நடைபெற்றது. McMaster university sociology professor Scott Davis என்பவரால் இந்த ஒன்ராறியோ எழுத்தறிவு, எண்ணறிவு காரியாலய ஆய்வு தலைமை தாங்கப்பட்டது. இந்த ஆய்வின் கண்டுபிடிப்புகள் யாவை என நோக்குவோம் - பட்டதாரிப் பெற்றோரின் பிள்ளைகளின் எழுத்தறிவு கோடை விடுமுறையில் ஒரு மாத அளவினால் கூடுகிறது. Doctors, Lawyers, Phd's முதலிய உயர் கல்வியறிவுள்ள பெற்றோரின் பிள்ளைகளின் எழுத்தறிவு கோடை விடுமுறையில் இரண்டு மாதத்தால் கூடுகிறது. வசதி குறைந்த, படிப்பறிவு குறைந்த வீடுகளில் வளரும் பிள்ளைகளின் எழுத்தறிவு இரண்டு மாதக் கோடை விடுமுறையில் முன்பு இருந்த அறிவிலும் பார்க்க ஒரு மாதம் பின்தங்கி விடுகிறது. இது ஒரு பாரிய இடைவெளிபோல் தோன்றவில்லை. ஆயினும் grade 1ல் ஏற்படும் ஒரு மாத இடைவெளி (Reading Gap) grade 3க்கு வரும்பொழுது ஒரு வருட இடைவெளியாக மாறிவிடும். U.S ல் நடைபெற்ற ஆய்வுகள் இத்தகைய இடைவெளி உயர்வகுப்புகளில் குறைவான புள்ளிகளைப் பெறுவதற்கும், பாடசாலையை விட்டு இடையில் விலகுவதற்கும் (Drop outs) கூடக் காரணமாக அமையலாம் என்பதைக் காட்டுகிறது.

Ontario Literacy & Numeracy Secretariat இரண்டு வருடங்களாக குறைந்த வருமானம் உள்ள அயல்களில் 30 கல்விச் சபைகளால் நடத்தப்பட்ட 60 summer literacy camps ஐ மையமாக வைத்து ஒரு ஆய்வை நடத்தியது. இதில் grade1 – grade 3 ஐ சார்ந்த 1073 மாணவர்கள் பங்குபற்றினார்கள். இவர்கள் எல்லோருமே எழுத்தறிவில் தமது வகுப்புக்குரிய திறமையிலும் பார்க்கக் குறைந்தவர்களாகவே இருந்தனர். ஆனால் மூன்று கிழமைகள் நடைபெற்ற இந்த பயிற்சிப் பட்டறைகளின் பின்பு இவர்களின் எழுத்தறிவு பயிற்சிக்குச் சமூகம் அளிக்காத அவர்களின் சகபாடிகளோடு ஒப்பிடுகையில் இவர்கள் 1.5 மாதம் கூடிய எழுத்தறிவைப் பெற்றிருந்தனர். ஆகவே மாணவர்களுக்குத் தேவைப்படுவது வாசிப்புக்கான வசதிகள் என்பது துல்லியமாகத் தெரிகிறது. கல்வியறிவு குறைந்த பெற்றோரால் பிள்ளைகளோடு அவர்கள் வாசிப்பவற்றைப் பற்றிக் கலந்துரையாட முடியாது, அத்துடன் எப்பொழுதும் வாசிக்கும் விடயம் பற்றிய பின்னணி அறிவு மிகவும் முக்கியம். சிறுபிள்ளைகளோடு சேர்ந்து வாசித்தால் (one – to – one) அவர்கள் அறிவு தனித்து வாசிப்பதிலும் பார்க்க அதிகரிக்கும். இத்தகைய பெறுமதி வாய்ந்த சந்தர்ப்பங்களை (Quality Resources) கல்வி அடைவுகளில் உயர்ந்த பெற்றோரால் கோடை விடுமுறையில் ஒவ்வொரு நாளும் வழங்க முடிகிறது. ஆகவே இந்த கோடை விடுமுறை எழுத்தறிவு இடைவெளியை எவ்வாறு நீக்கலாம் என்ற கேள்வி எல்லோர் மனதிலும் தோன்றலாம். அதிகளவு Summer Camps தேவைப்படுகிறது என்பது கண்கூடு.

அரசாங்கத்தின் தயவை நம்பி இருக்காமல் எங்கள் சமூக அமைப்புகள் இத்தகைய ஒரு புண்ணிய கைங்கரியத்தில் கோடை விடுமுறையில் ஈடுபடுதல் வேண்டும். எமது சமூகத்தில் ஆங்கிலப் புலமைமிக்க பல முதியோரின் அறிவு வீண்விரயமாகிறது. இளையோரும் முதியோரும் ஒன்றிணைந்து வாசிப்புப் பட்டறைகளை எமது பிள்ளைகளுக்கு வழங்குதல் எல்லோருக்கும் நன்மை பயக்கும். பெற்றோரும் பிள்ளைகளை விடுமுறை காலத்தில் வீட்டுக்கு அண்மையில் உள்ள நூல் நிலையங்களுக்கு அழைத்துச் சென்று அங்கு நடைபெறும் வாசிப்பு பட்டறைகளில் ஈடுபடுத்துவதோடு, வீட்டில் வாசிப்பதற்கும் புத்தகங்களை கொண்டு வருதல் விடுமுறை காலத்தை அவப் பொழுதாகக் கழிக்காமல் இருக்க உதவும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



'சிந்தனைப் பூக்கள்' எஸ். பத்மநாதன்

# மனமே! நலமா?

24

ஒவ்வொருவரும் சக்தி மூலம் ஆற்றல் அதிகரிக்க முயல்கிறார்கள். பொதுவாக உடல்நலம், பணநலம் மட்டுமே நமது சக்திச் சேகரிப்பு என எண்ணுகிறோம். ஆனால் மனநலம் பற்றி கவலைப்படுவது குறைவு. நம்மைச் சுற்றியுள்ள அனைத்தும் நமக்கு சக்தியை வழங்குகின்றன. பிரபஞ்சமே சக்திச் சுழற்சி என்கிறது அறிவியல். நம்மைச் சுற்றி நடைபெறும் இயக்கங்களில் சில கண்களுக்குப் புலப்படுபவை, சில கண்களுக்கு புலப்படாதவை. இவை சாதாரணமானவை அல்ல. மாபெரும் இயக்கங்கள். இதில் முதன்மையானது மனமும் அதன் இயக்கமும் ஆகும்.

ஆழ்மனம் என்பது அதியற்புதமானது. இதன் சக்தியும் மிகவும் அபாரமானது. 1979ம் ஆண்டு உயிர் இயற்பியல் (Biophysics) துறையில் பட்டம் பெற்ற பெவர்லி ரூபிக் (Beverly Rubik) மனம் பற்றி ஆராய்ந்தவர்களில் முதன்மையானவர். இதற்கு காரணம் இவரது மூட்டுவலியை டாக்டர் ஒல்கா வோரால் (Dr. Olga Worrall) என்பவர் தனது கைகளால் தடவியே நோவினைத் தீர்த்தது தான். நவீன கல்வியிலும் சிந்தனைகளிலும் நம்பிக்கை கொண்ட பெவர்லிக்கு இது ஒரு ஆச்சரியமான நிகழ்வு என்பதாலேயே ஆழ்மனம் பற்றி அறிய முற்பட்டார். பலரது கைகளை நுணுக்குக் காட்டியில் (Microscope) வைத்து சோதனையிட்ட வேளையில் சில உண்மைகளை உணர்ந்தார். உயிர் மின்காந்த நுண்ணலைகள் (Bio electromagnetic subtle waves) உருவாகி இந்த அற்புதத்தினை நிகழ்த்தியது என்று கண்டறிந்தார். இதிலிருந்து ஆழ்மன சக்தியாளர்களின் ஸ்பரிசம் நோய்களை தீர்க்கவல்லது என்று புலனாகியது. டாக்டர் ஒல்கா 1985ம் ஆண்டுவரை இப்படி செய்து பலரின் நோய்களைத் தீர்த்துள்ளார்.

இன்று பலரின் உடல்களில் இயல்பாகவே மின்சக்தி வெளிப்படுவதனை கண்டு அறிய முடிகிறது. பல்வேறு உலோகப் பொருட்களைக் கூட உடலில் ஒட்டி நிறுத்திக் காட்டுகின்றனர் சிலர். அதேபோன்று மென்மையான ஸ்பரிசத்தால் நோய்கள் மாறிவிடுவதாகவும் சிலர் கூறுகின்றனர். சில நோயாளிகள் வைத்தியம் செய்பவர் தடவியபோது மின்சாரம் பாய்ந்தது போலிருந்தது என கூறுகின்றனர். எவ்வளவு தூரம் விஞ்ஞானம் வளர்ந்திருந்தாலும் ஆழ்மன வலிமையால் இப்படியான புதுமைகளை செய்பவர்கள் பற்றி எதைக் கூறுவதென்று புரியவில்லை.

எத்தனையோ விடயங்கள் ஆழ்மன அளவிலேயே தீர்மானிக்கப்படுகின்றன என்பதனை அறிய முடிகின்றது. சீவராசிகளிடமும் இத்தகைய குணாதிசயங்கள் உள்ளதாக விஞ்ஞானிகள் கூறுகின்றனர். எறும்பு பற்றிய ஆராய்ச்சி செய்யப்பட்டபோது அது செல்லும் நேரிய வரிசை ஆறறிவு படைத்த எம்மால் கூட செய்ய முடியாது. எறும்புகளிடமிருந்து ஒழுங்காக வரிசையை நாம் படித்துக் கொள்ள வேண்டும் போல் இருக்கிறது. ராணி எறும்பு உயிருடன் இருக்கும்வரை அதனிடமிருந்து எப்படியோ கட்டளைகள் மற்றைய எறும்புகளுக்கு போய்ச் சேருகின்றன. இது ஒரு பேராச்சரியமே!

ஆழ்மனத்திற்குள் செல்லும்போது எந்த ஒரு பிரபஞ்ச சக்தியும் எமக்கு கிடைத்துவிட நிறையவே வாய்ப்புள்ளது. ஆகாய ஆவணங்களும் மிக எளிதில் கிடைத்துவிடுகின்றன. ஆனால் இந்த நிலைக்கு செல்வதுதான் மிகவும் கடின-மான வேலை.
மனதினை ஒருமுகப்படுத்த முயற்சி எடுப்போம்!
மீண்டும் சந்திப்போம்.●

## புதிய நூறு டாலர் தாளின் ஆசிய உருவம் மாறுகிறது!

கனடாவின் புதிய நூறு டாலர் தாள் வெளியாகி ஒரு வருடத்துக்குள்ளேயே அதில் மாற்றம் ஏற்படுத்தப்படுகின்றது. இந்தத் தாளில் காணப்படும் ஆளின் தோற்றம் ஆசிய இனத்தவரைப் போன்று காணப்படுவதாக இருப்பதால் மற்றைய இனங்களைப் பாதிப்பதாகச் சுட்டிக்காட்டப்பட்டதால், அதனை மாற்ற முடிவாகியுள்ளது. சீனப்பெண்ணின் தோற்றம் இதில் காணப்படுவதாக மத்திய வங்கி தெரிவித்ததை இங்குள்ள பல்வேறு சீன அமைப்புகளும் வன்மையாகக் கண்டித்துள்ளன. 'இது ஒரு இனவாதச் செயற்பாடு' என்று இவர்கள் குறை கூறியுள்ளனர்.

## ஜாக் லேட்டன் முதலாண்டு நினைவு

கடந்த வருடம் புற்று நோயினால் மரண-மான ஜாக் லேட்டனின் முதலாவதாண்டு நினைவு நிகழ்வுகள் ஆகஸ்ட் 22ஆம் திகதி நகரின் பல பாகங்களிலும் இடம்பெற்றது. அவர் தமது அரசியல் வாழ்க்கையை நகரக் கவுன்ஸிலராக ஆதம்பித்த ரொறன்ரோ நகர முன்றலிலுள்ள நேதன் பிலிப் அரங்கில் அவரது குடும்ப உறவினர்கள் பங்குபற்றிய நிகழ்வு உணர்வுபூர்வமாக நிகழ்ந்தேறியது. ஜாக் லேட்டனின் மனைவி ஒலிவியா சோ, லேட்டனின் முதல் மனைவியின் மகனும் ரொறன்ரோ நகரசபை உறுப்பினருமான மைக் லேட்டன் ஆகியோர் இங்கு சமுகமளித்திருந்தனர்.

## கனடிய மூன்று நகரங்கள் உலகின் முதல் தரமான ஐந்து நகரங்களில் தெரிவு

கனடிய மூன்று நகரங்கள் உலகில் மக்கள் வாழுவதற்குரிய சிறந்த நகரங்களின் முதல் ஐந்துக்குள் இடம்பெற்றுள்ளன. இந்தத் தெரிவை 'எக்கனமிஸ்ட்' சஞ்சிகை நடத்தியது. முதலாவது நகரமாக ஆஸ்திரேலியாவின் மெல்போர்ண் நகரமும், இரண்டாவதாக ஒஸ்ட்ரியாவின் வியன்னா நகரமும் வந்துள்ளன. மூன்றாம் நான்காம் ஐந்தாம் இடங்களை முறையே வன்கூவர், ரொறன்ரோ, கல்கேரி ஆகிய நகரங்கள் பிடித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அ. முத்துலிங்கம்

# இன்றைய நாள்

இன்று முதலைகளைப் பற்றி படிக்கும் நாள். காலையிலிருந்து அதைத்தான் செய்கிறேன். புத்தகத்தில் படிப்பதும் ஏதாவது புது சந்தேகம் ஏற்பட்டால் கம்புயூட்டரில் தேடுவதுமாக நீண்ட நேரம் என் ஆராய்ச்சி நடந்தது. நான் ஒருமுகமாக வேறு கவனம் இல்லாமல் இந்த ஆய்வில் மூழ்கியிருந்ததைப் பார்ப்பவர்கள் நான் ஏதோ முனைவர் பட்டத்துக்கு தீவிரமாகப் படிப்பதாக நினைத்திருப்பார்கள்.

முதலைகள் குளிர் ரத்தப் பிராணிகள். அவை சாப்பிட்ட உணவு செரிக்க நீண்ட நாட்கள் எடுக்கும். மீன்களைச் சாப்பிடும். நீர்நிலைக-ளில் காத்திருந்து தண்ணீர் குடிக்கவரும் விலங்குகளை தாக்கி அவற்றை நீரிலே மூழ்கவைத்து கொன்று பின்னர் உண்ணும். எலும்புகளைக் கரைக்கும் திரவம் வயிற்றிலே உண்டாகி செரிப்பதற்கு உதவும். சில முதலைகள் கூழாங்கற்களை விழுங்கி செரிப்பதை துரிதப்படுத்துவதும் உண்டு.

பெண்முதலை ஆற்றின் கரையிலே இலை, தழைகளைக் குவித்து அதற்குள் முட்டையிட்டு காவல்காக்கும். 80 நாட்களில் முட்டை பொரித்து 30 - 40 குஞ்சுகள் வெளிப்படும். இவற்றை தாய் உட்கார்ந்து பொரிக்க வைப்பதில்லை. அவை சூரிய வெப்பத்தில் இலை தழை உக்கும்போது கிடைக்கும் சூட்டில் தானாகவே பொரிக்கும். முதலைக்குஞ்சு ஆணா பெண்ணா என்பதை தீர்மானிப்பது அந்தச் சூடுதான். வெப்பத்துக்கு தகுந்தபடி சிலவேளை எல்லா முட்டைகளும் ஆணாக பொரிக்கும் அல்லது எல்லாமே பெண்ணாகப் பொரிக்கும். தாய் முதலை குஞ்சுகளை வாயில் கவ்விச் சென்று நீரில் விடும். பின்னர் தாயும் தகப்பனுமாக அவற்றை பாதுகாக்கும். இரண்டு வாரத்தில் தாமே இரையை தேட குஞ்சுகள் கற்று தாயை பிரிந்துபோய்விடும்.

இந்த இடம் வந்தபோது எனக்கொரு சந்தேகம் வந்தது. ஐங்குறுநூறில் ஓரம்போகியாருடைய பாடல் ஒன்று வருகிறது. 'தன் பார்ப்புத் தின்னும் அன்பில் முதலையோடு' என்று. தன் பிள்ளைகளை தானே தின்னும் முதலையின் நாட்டைச் சேர்ந்தவன் என்பதாக பொருள் தரும் பாடல். முதலை அதனுடைய பிள்ளையை தின்னுமா என்பதுதான் கேள்வி? முட்டையிட்டு 80 நாள்வரை காவல்காத்து, குஞ்சுகளை சேமமாக ஆற்றுக்கு இட்டுச்சென்று அதன் பின்னரும் பாதுகாப்பு கொடுக்கும் முதலை தன் குஞ்சை சாப்பிடுமா? விலங்கியல் பேராசிரியர் ஒருவரை தொலைபேசியில் அழைத்துக் கேட்டேன். அவர் சொன்னார் 'ஆபத்தான சமயத்தில் முதலைக் குஞ்சுகள் தாயிடம் ஓடிவரும், தாய் வாயை திறந்ததும் உள்ளே ஒளிந்துகொள்ளும். ஆபத்து அகன்றதும் மீண்டும் வெளியேவரும்' என்று. இதைப் பார்த்த ஒரு புலவர் தாய் முதலை குஞ்சை தின்கிறது என்று நினைத்து அப்படி பாடியிருக்கலாம் என்று இப்போது தோன்றுகிறது.

பல வருடங்களுக்கு முன்னர் என் அறை நண்பர் ஒருவர் சொன்னது நினைவுக்கு வருகிறது. நாங்கள் இருந்த வீட்டின் எண் 18 3/4. நண்பர் சொல்வார் பின்னக் கணக்கு தெரிந்தால்தான் எங்கள் வீட்டு விலாசத்தை கண்டுபிடிக்கலாம் என்று. 18ம் நம்பர் வீட்டில், நாலு பிரிவுகளில் நாங்கள் மூன்றாவது பிரிவில் ஓர் அறையில் குடியிருந்தோம். நாலு வருடங்கள் அவருடன் வாழ்ந்திருக்கிறேன். சாதுவான மனிதர்தான் ஆனால் இரவில் வேறு ஒருவராக மாறிவிடுவார். அவருக்கு தூக்கத்தில் நடக்கும் வியாதி என்பதால் கதவை திறந்து அதே வீட்டு எண்ணின் வேறு ஒரு பிரிவுக்குள் அவர் நுழைந்துவிடுவார். நான் இரவில் கதவைப் பூட்டி திறப்பை தண்ணீர் நிரப்பிய ஒரு பாத்திரத்துக்குள் போட்டு வைப்பதை வழக்கமாகக் கொண்டிருந்ததால் கடுமையான விபத்துகளிலிருந்து தப்பினார். இவர் குடித்தால் அழுவார். சிலர் சிரிப்பார்கள், சிலர் திட்டுவார்கள், சிலர் தூங்குவார்கள். ஆனால் இவர் அழுவார்.

ஒருமுறை தன்னுடைய தகப்பன் இறந்த விவரத்தை இவர் கூறினார். டியத்தலாவ என்னும் இடத்தில் தகப்பன் வேலை பார்த்தார். வழக்கம்போல காலையில் அவர் ஆற்றிலே குளிக்கப் போனார் ஆனால் திரும்பவில்லை. முதலை அவர் காலைப் பிடித்து சுழற்றி இழுத்துக்கொண்டு போனதைப் பார்த்தவர்கள் சொன்னார்கள். எங்கேயோ உடலை மறைத்துவைத்து பல நாட்கள் உண்டிருக்கும். சடலம் கிடைக்கவே இல்லை. அப்பொழுது நண்பர் தனக்கு ஆறு வயது என்று சொன்னார். முழங்கால் அளவு தண்ணீரில் நின்றபோது தன் தகப்பனுக்கு இப்படி நடந்துவிட்டது என்று 19 வருடம் கழிந்த பின்னரும் சொல்லிச் சொல்லி அழுவார். எப்பொழுது அவர் குடித்தாலும் இது நடக்கும். முதலையிடம் தகப்பனை பறிகொடுத்த ஒருவரை எத்தனை பேருக்கு தெரியும்?

மகாபாரதத்தில் ஒரு கதை வரும். துரோணாச்சாரியார் வில்லுக்கு அதிபதி. பாண்டவர்களுக்கும் கௌரவர்களுக்கும் அவர்தான் குரு. எல்லோருக்கும் அவர் சமமாக கற்பித்தாலும் அதிகம் கற்றவன் அர்ச்சுனன்தான். துரோணருக்கு அர்ச்சுனனிடத்தில் அதீத பிரியம் இருந்தது. ஒருநாள் துரோணர் ஆற்றிலே குளிக்கும்போது ஒரு முதலை அவர் காலைக் கவ்விப் பிடித்து இழுத்துப்போனது. போரிலே ஒருவராலும் தோற்கடிக்க முடியாத அதிவீரரான துரோணர் தன் சிஷ்யர்களைப் பார்த்து கத்தினார். எல்லோரும் திகைத்துப்போய் நிற்க அர்ச்சுனன் மாத்திரம் கணம்கூட தயங்காமல் அம்பெய்து முதலையைக் கொன்று குருவைக் காப்பாற்றினான். அப்பொழுது துரோணர் நன்றிக் கடனாக அர்ச்சுனனுக்கு பிரம்மாஸ்திர ரகஸ்யத்தை உபதேசித்தார். வேறு ஒருவருக்கும் கிட்டாத வாய்ப்பு ஒரு முதலையால் அர்ச்சுனனுக்கு கிட்டியது.

'இன்றைய நாள்' என்று தலைப்பு போட்டு நான் இன்று எழுதத் தொடங்கியதற்கு காரணம் வேறு. நான் கணினியிலே முதலையைப் பற்றி படித்துக்கொண்டிருந்தபோது ஒரு பூச்சி ஊர்ந்து ஊர்ந்து வந்து நான் படிக்கும் வார்த்தையின் மேல் நின்றது. வார்த்தையை மறைத்ததால் அது என்ன வார்த்தை என்று தெரியவில்லை. நான் இது என்ன என்று தொட்டதும் அது செத்துப் போனது. ஆனால் திரையிலே பூச்சியின் உடல் இல்லை. நான் படித்த வார்த்தையின்மேலே உடல் கிடந்தது. எனக்கு ஆச்சரியம் தாளவில்லை. யாரோ மினக்கெட்டு ஒரு வைரஸ் உண்டாக்கி அனுப்பியிருக்கிறார்கள். ஒரு பூச்சி ஊர்ந்து வரும். நீங்கள் தொட்டதும் இறந்துபோகும். இறந்துபோனது வெறும் கற்பனைப்பூச்சிதான்.

நான் கம்புயூட்டரை முதலில் இருந்து இயக்கி மறுபடியும் அதே கட்டுரையை படித்தேன். இம்முறை ஒரு பூச்சியும் வரவில்லை. அது வேறு ஏதோ கம்புயூட்டரை தேடி போய்விட்டது. யாரோ ஒருவர் இப்படி ஒரு பூச்சியை உருவாக்கி கம்புயூட்டர் கம்புயூட்டராக ஏவிக்கொண்டிருந்தார். இன்றைய தினம் அவருக்கு என்னால் ஒரு சின்ன மகிழ்ச்சியை கொடுக்க முடிந்திருக்கிறது.

இலங்கை மகாகவி உருத்திரமூர்த்தியின் கவிதை ஒன்று நினைவுக்கு வந்தது. 'புள்ளியளவில் ஒரு பூச்சி' என்று ஆரம்பமாகும். கவி ஒரு புத்தகம் படித்துக்கொண்டிருந்தபோது ஓர் இடத்தில் தேவையில்லாமல் ஒரு புள்ளி கிடக்கிறது. கவி அதைத் தொட்டுப் பார்த்தபோது அது புள்ளி இல்லை பூச்சி என்பது தெரிகிறது. தொட்டதும் பூச்சி இறந்துவிட்டது. கவிக்கு துக்கம் ஆற்றமுடியவில்லை. ஒரு பாவமும் அறியாத பூச்சி இப்படி இறந்துவிட்டதே என அரற்றுகிறார். இரண்டு எதிரெதிர் கண்ணாடிகளில் பிம்பம் முடிவற்று பிரதிபலிப்பதுபோல முடிவில்லாத துயரம் அவரை பற்றிக்கொள்கிறது.

இன்றைய நாள் ஐங்குறுநூறில் ஆரம்பித்து மகாகவியின் கவிதையில் வந்து நின்றது. நாள் முடிந்தாலும் என் மனது முடியவில்லை. எதற்காக இந்த மனிதர் பூச்சியை உண்டாக்கினார். எதற்காக என் கணினியை நோக்கி அதை ஏவி விட்டார். கற்பனை பூச்சி என்றாலும் அது இறந்தது என் மனதை பிசைகிறது. முதலையை பற்றி படித்த என்னை பூச்சி நோக்கி திருப்பிவிட்டதால் என் நாளே மாறிவிட்டது. இந்த மனிதருக்கு இதில் ஒரு மகிழ்ச்சி. இவர் தன் பிள்ளையை தானே தின்னும் முதலையினிலும் பார்க்க கொடிய நெஞ்சுள்ளவராக இருப்பாரோ?●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். ஜெகதீசனின் *பத்தாம் பக்கம்*

# கடவுள் துகள்

நீக்கமற நிறைந்திருப்பவர் கடவுள் என்பதை நிரூபிப்பது போல உலகெங்கும் வெளிவரும் ஊடகங்கள் அனைத்திலும் நிறைந்திருந்தது ஒரு கட்டுரை.

அதன் பெயர் கடவுள் துகள். அறிவியலார்களுக்கு ஆர்வமான தினமாக மட்டுமல்லாது அக் கட்டுரை வெளிவர காரணமாகவும் 2012 ஜூலை மாதம் 4 ம் திகதி அமைந்தது.

இந்தப் பிரபஞ்சம் தோன்றக்காரணமாயிருந்த பெரு வெடிப்பின் பொழுது ஏற்பட்ட மோதலில் ஒலியைவிட அதிவேகத்தில் சிதறிய நுண்துகள்கள் பின் எந்தச் சக்தியால் இணைந்து மூலக்கூறுகளாக அணுக்களாக கோள்களாக பேரண்டமாக மாறியது என்பதை செயற்கைப் பெரு வெடிப்புச்சோதனை மூலம் நிரூபித்த தினம் அத் தினமாகும்.

அணுக்களை ஒன்றோடு ஒன்று ஒட்ட வைக்கும் பொருளை கண்டு பிடித்து பிரபஞ்சம் உருவான ரகசியத்தை அறிய ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டது. அணுக்களை மிக வேகமாக மோத விடுவதன் மூலம் பெரு வெடிப்பின் போது ஏற்பட்ட பிரளய சூழ்நிலையை உருவாக்கி அதன் மூலம் அணுக்களின் ஒட்டுப்பொருளை கண்டறியலாம் என விஞ்ஞானிகள் முடிவு செய்தனர்.

அணுதான் அடிப்படை என்றிருந்த விஞ்ஞானத்தில் துகள் அறிவியல் விரிவுபட ஆகச்சிறியதான அணுவை பிளந்து பிளந்து ஆராய்ந்ததில் புரோட்டனும் நியூட்ரானும் கண்டறியப்பட்டன. அவற்றையும் துளைக்க வெளிப்பட்டது குவாக். அதனையும் ஊடுருவ எலெக்ட்ரான் தெரியவந்தது. பின்னர் அதுவும் நுணுகி லெப்டன் எனும் நுண்துகள் புலப்பட்டது.

ஐரோப்பிய அணு ஆராய்ச்சி நிலையத்தில் செயற்கைப் பெரு வெடிப்புச்சோதனைக்காக கோடிக் கணக்கான லெப்டன் நுண்துகள்களை துகள்முடுக்கிகளால் அதிவேகத்தில் மோதவிட்டதில் 1253 எலக்ரோ வாட்ஸ் எடையுடன் ஒரு புதுத்துகள் தோன்றியது.

இவ்வளவு பேராற்றல் உள்ளதை இதுவரை காணாததால் அது கடவுள் துகள் ஆகிற்று. அத்துடன் எங்கும் நிறைந்துள்ளது. எதற்கும் ஆதாரமாயுள்ளது. அதைப் பார்க்கவும் உணரவும் முடிவதில்லை என்பதாலும் அது கடவுள் துகள் ஆனது.

சுவிட்சலாந்தில் நிலத்தின் கீழ் 574 அடி ஆழத்தில் 27 கிலோ மீட்டர் நீளத்தில் அமைக்கப்பட்ட சுரங்க ஆய்வகத்தில் செயற்கை முறையில் இந்தப் பெரு வெடிப்பு மேற்கொள்ளப்பட்டது. பிரபஞ்ச இயக்கக் கோட்பாட்டை கண்டறிய 37 நாடுகள் 169 ஆய்வு நிறுவனங்கள் 3000 ஆராய்ச்சியாளர்கள் கிட்டத்தட்ட 50 ஐம்பது வருட காலம் உழைத்தனர்.

அகிலத்தை எது படைக்கின்றதோ எது காக்கின்றதோ எது அழிக்கின்றதோ எது அருள்கின்றதோ எது மறைக்கின்றதோ அந்தச் சக்தியே கடவுள் துகள் என்னும் விஞ்ஞானிகள் கடவுளையே கண்டு பிடித்த பேரானந்தப் பெருவாழ்வில் திளைக்கின்றார்கள்.

ஆகப்பெரியதான அண்டம் உருவான விந்தையை அறிந்ததாக அவர்கள் ஆனந்த கூத்தாடுகின்றனர். பிரபஞ்சம் ரகசியம் அவிழ்ந்ததாக ஆர்ப்பரிக்கின்றனர்.

சுமார் 1370 கோடி வருடங்களுக்கு முன்பாக அண்டவெளியில் அணுக்கள் ஒன்றுடன் ஒன்று மோதின. பலத்த மோதலால் (Big Bang) நிகழ்ந்த பெரு வெடிப்பால் சிதறிய கோடானுகோடி நுண்துகள்கள் இணைந்திட பிரபஞ்சம் முழுவதும் மெல்லமெல்ல உருவானது.

சகல இயக்கங்களுக்கும் 16 நுண்துகள்களே அடிப்படை ஆதாரம் என்பது அறிய வந்தது. அறிவு வந்தது. எனினும் அணுக்களை ஒன்று சேர்க்கும் ஒட்டுப்பொருள் எது என்பது புரியாத கதைக்குள்ளும் புதிரான கதை ஆகியது.

இந்த 16 துகள்களும் புலப்படாத ஆற்றலுடன் சேர்ந்து நிறையைப் பெறுகின்றன. அந்த ஆற்றலையும் அதன் புலப்படாத நுண் துகள்களையும் ஆராய்ந்தவர்கள் இருவர். இந்திய விஞ்ஞானி சத்தியேந்திர போஸ் மற்றும் பிரித்தானிய இயற்பியலாளர் பீட்டர் ஹிக்ஸ்.

அணுத்துகள் சில எடையுள்ளதாகவும் சில எடையற்றதாகவும் இருக்கக் காரணம் என்ன என அறிந்தால் அதுவே பிரபஞ்ச ரகஸியம் என முதலில் அவர்களே அறிவித்தனர்.

குவாண்டம் இயக்கவியலுக்கு அவர்கள் இருவரும் ஆற்றிய அரிய பங்களிப்பை கௌரவிப்பதற்காக கண்டறியாத அந்தத் துகளுக்கு (Higgs Boson) ஹிக்ஸ் போஸன் துகள்கள் என பெயரிட்டனர்.

அமெரிக்க விஞ்ஞான எழுத்தாளரான லியன் மக்ஸ் லிடர்மன் என்பவரே கடவுள் துகள் என்ற பெயர் முதன்முதல் வெளிவர காரணமாக அமைந்தவர் ஆவர். ஹிக்ஸ் போஸன் துகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதை சிறுமைப்படுத்தும் விதத்தில் தனது புத்தகத்திற்கு நாசமாகப்போன துகள் என்று தலைப்பு வைத்தார் (THE GOD-DAMN PARTICLE). பதிப்பாளர்கள் அதனை THE GOD PARTICLE என மாற்றிட கடவுள் துகள் அவதரித்தது.

கடைசியில் கண்டறியாததை கண்டறிந்து விட்டார்கள்.ஆனால் ஆலயத்திலா? ஆய்வு கூடத்திலா? என்பதை கண்டறிய கன காலமெடுக்கும்'

*மாதர்பிறை கண்ணியானை மலையான் மகளோடும் பாடி போதொடு நீ ர் சுமந்தேத்தி புகுவார் அவர் பின் புகுவேன் யாதும் சுவடு படாமல் ஐயாறு அடைகின்ற போது காதல் மடப்பிடியோடு களிறு வருவன கண்டேன். கண்டேன் அவர் திருப்பாதம் கண்டறியாதன கண்டேன்.-அப்பர் சுவாமிகள்.●*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆ. சிவநேசச்செல்வனின் “ஈழத்துத் தமிழ் பத்திரிகைகள் ஓர் ஆய்வு' நூல் அறிமுக விழா



இலங்கையின் வீரகேசரி, தினக்குரல் ஆகிய பத்திரிகைகளில் ஆசிரியராகக் கடமையாற்றிய 'கலாசூரி' ஆ. சிவநேசச்செல்வனின் (ஆசிச்செல்வன்) “ஈழத்துத் தமிழ்ப் பத்திரிகைகள் ஓர் ஆய்வு' என்னும் நூலின் அறிமுக விழா கனடாவில் நடைபெறவுள்ளது. 2012 செப்டம்பர் ஏழாம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 5:30 மணிக்கு ஸ்காபரோ சிவிக் சென்டரில் அமைந்துள்ள அங்கத்தவர் கூட்ட மண்டபத்தில் விழா நடைபெறுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

174 பக்கங்களிலான இந்த நூல், இலங்கைப் பத்திரிகைத் துறையின் 1930ஆம் ஆண்டு வரையான வரலாற்றை ஒரே பார்வையில் தருகின்றது. “பத்திரிகை மரபை நுணுகி நோக்குவதற்கு வாய்ப்பாக 1930ஆம் ஆண்டு வரை இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலத்தைச் சுருக்கி நோக்கும்போது ஆழமான நோக்கு வலுவடையும் என்ற உண்மையின் அடிப்படையில் இவ்வாய்வின் எல்லை டொனமூர் அரசியல் திட்டம் உருவாகிய 1930ஆம் ஆண்டாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ளது. தேசிய விழிப்புணர்ச்சிக்கான பல்வகை மாற்றங்களும் இக்காலத்திலேயே உருப்பெற்றன. பத்திரிகைத்துறை நோக்கிலும் இக்கால எல்லை பொருத்தம் நோக்கிக் கொள்ளப்பட்டுள்ளது” என்று நூலின் ஆரம்பத்தில் சிவநேசச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

பேராசிரியர் கா. சிவத்தம்பி, கலாநிதி சபா ஜெயராசா ஆகியோர் நூலுக்கு முறையே அணிந்துரையும் முன்னுரையும் வழங்கியுள்ளனர்.



பொன்னையா விவேகானந்தன்

## கொடைமடம் - படைமடம்

27

தமிழ் இலக்கியங்களை மெய்மை இலக்கியங்கள் என்றும் சில ஆய்வாளர் கருதுவர். இதன் பொருள் வாழ்வின் மெய்மையைக் கூறும் இலக்கியங்கள் என்பதல்ல, பொய்மை கலப்பற்ற, இயல்பான வாழ்வைக் கூறும் இலக்கியங்கள் என்பதாகும்.

அழகான உவமைகளோடு, சமூகவாழ்வை நேர்த்தியாகப் படம் பிடித்துக் காட்டும் தமிழ் இலக்கியங்களில் சங்க இலக்கியங்கள் தனியிடம் பெறுகின்றன.

சங்கப்புலவர்கள், உணர்ந்த உண்மைகளை, சிறிய பாடல்கள் வாயிலாக, வெளிப்படுத்திய பாங்கு இன்றும் வியக்க வைக்கின்றது.

பேகன் என்றொரு வேந்தன். குளிரால் நடுங்கிய மயிலுக்குப் போர்வை வழங்கியவன் எனப் போற்றப்படுபவன். இல்லையென்று வருவோர்க்கு வாரி வழங்கிய வள்ளல்.

இவனது செயற்றிறனைக் கூர்ந்து நோக்குகின்றார் பரணர் எனும் புலவர். கொடையிலும், படை நடத்துவதிலும் வல்லவனான பேகன், கொடை வழங்குவதில் மடமை மிக்கவனாக இருக்கின்றான் என்கிறார். ஆனால் படை நடத்துவதில் தெளிவு மிக்கவன், மடமை அற்றவன் என்கிறார்.

புறநானூறு எனும் இலக்கியத்தில் இடம்பெறும் பாடல் ஒன்றினால் இச்செய்தி வெளிப்படுகின்றது.

பேகனை மழைக்கு ஒப்பிடுகின்றார். மழை பொழிகின்றபோது, நீரைத் தேக்கிவைக்கின்ற குளங்களிலும் பொழிகின்றது. பயிர் விளையும் வயல்களிலும் பெய்கின்றது. இன்னுமொரு புறத்தில் பயன்படாத உவர்நிலங்களிலும் பொழிகின்றது. மழையிடம் பொழிகின்ற இடம் பற்றிய-தான எந்த வேறுபாடுகளும் இருப்பதில்லை.

பேகனும் இந்த மழையைப் போன்றவன். மழைக்குரிய மடமைத்தனம் பேகனிடத்தும் காணப்பட்டது என்கிறார் பரணர். இரக்கம் மிக்க, ஈர இதயத்தைக் கொண்டவனான பேகன், பொருளை வழங்கும்போது, தக்கவர் யார், தகாதவர் யார் என வேறுபாடு பார்ப்பதில்லை. வருவோர்க்கெல்லாம் வாரிக்கொடுக்கின்றான். இதனால், பொருள் அல்லாதவரோடு பொல்லாதவரும் பயன்பெற்று விடுகின்றனர்.

பேகனது இந்தக் கொடைமடம், போர்க்களத்தில் இல்லை என்கின்றார் பரணர். போர்க்களத்தே புகுந்து வீரம் விளைவிக்கும் போதெல்லாம், மிகத் தெளிவோடிருந்தான் பேகன். இன்னாரைத் தாக்க வேண்டும். இன்னாரைத் தாக்கக்கூடாது என்ற வேறுபாட்டை நன்கு அறிந்தவனாக இருந்தான்.

பேகனிடத்தே கொடைமடம் இருந்ததே தவிர, படைமடம் இருக்கவில்லை என்று சிறப்பை வெகு அழகாக வெளிப்படுத்துகின்றார் பரணர்.

“அறுகுளத்து உகுத்தும் அகல்வயல் பொழிந்தும்
உறுமிடத்து உதவாது உவர்நிலம் ஊட்டியும்
வரையா மரபின் மாரி போலக்
கடாஅ யானைக் கழற்கால் பேகன்
கொடைமடம் படுத்தல் அல்லது
படைமடம் படான்பிறர் படைமயக் குறியனே” - புறநானூறு

கண்வழியே கண்ட காட்சிகளை மிகப் பொருத்தமான உவமையின் ஊடாக, எமக்கு உணர்த்தி, பேகனின் கொடைச்சிறப்பையும், போர்ச்சிறப்பையும் அழகுறக் கூறிவிடுகின்றார் புலவர்.

ஆறு வரிகளைக் கொண்ட இந்தச் சிறிய பாடலுக்குள் அக்கால வேந்தரின் ஈர வாழ்வையும், வீர வாழ்வையும் நாம் நுட்பமுறக் கண்டுகொள்கின்றோம்.

'இந்திய இலக்கியங்கள் அளவிறந்த கற்பனைகளையும், நடைமுறைக்கு ஒவ்வாத மந்திர தந்திர சாகசங்கள் கொண்டவை. உண்மையான வரலாற்றை அறிவதற்குப் பொருத்தமற்றவை' என்ற கருத்தை மேற்குலக வரலாற்றாய்வாளர் கொண்டிருக்கின்றனர். ஆயினும், தமிழ் இலக்கியங்களுக்கு இக்கூற்றுப் பொருந்தாது எனவும் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றனர்.

எமது கடந்தகால வாழ்வின் உண்மையான கண்ணாடி இந்த இலக்கியங்களே! ●

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

*எம்மைச் சுற்றி நடப்பவைகளிலிருந்து பொறுக்கி எடுக்கப்பட்ட சில சம்பவங்களைக் காய்தல் உவத்தலின்றி எழுதும் இந்தப் பத்தி (column). அவ்வப்போது வெளிவரும். கண்டவை, கேட்டவை, நடந்தவையே இதன் மூலாதாரம். ஒருவகையில் பார்த்தால் இதுவும்கூட தகவல்தான்.*

# இது எப்பிடி இருக்கு?

## விழா அழைப்பிதழ்களை இப்படியும் வழங்கலாம்!

ரொறன்ரோவில் கடந்த மாதம் சிறப்பாக நடைபெற்ற பாராட்டு விழாவொன்றில் நடைபெற்ற சம்பவம் இது.

விழாவின் இறுதிக் கட்டத்தில் விழா நாயகரின் நண்பர்கள் அன்பர்கள் வரிசையில் சென்று மாலைகள் சூட்டி, பொன்னாடைகள் போர்த்து, அன்பளிப்புகள் வழங்கி மகிழ்ந்து கொண்டிந்தனர்.

வரிசையில் நின்றவர்களில் ஒருவர் ஒரு என்வலப்பைப் பக்குவமாக விழா நாயகரின் கைளுக்குள் வைத்துச் சென்றார். அது என்வலப் என்பதால் மிகவும் கவனமாக அவரும் அதனைக் கொண்டு சென்றார்.

இரண்டு நாட்களின் பின்னர் அந்த எல்வலப்பைத் திறந்தபோது ஆச்சரியம். கலைஞர் ஒருவரது மாணவரின் அரங்கேற்றத்துக்கான அழைப்பிதழ்.

அழைப்பிதழ்களை இப்படியும் வழங்கலாம் என்பதற்கு இது ஒரு முன்மாதிரியோ

## புத்தர் சிலையை அணைத்து முத்தம் கொடுத்தது தவறாம்!

தென்னிலங்கையில் நடந்த ஒரு சம்பவத்துக்கு உள்நாட்டில் மட்டுமன்றி வெளிநாடுகளிலும் நல்ல 'பப்ளிசிட்டி' கிடைத்துள்ளது.

புத்தர் சிலையொன்றுக்கு முத்தம் கொடுத்த மூன்று பிரான்ஸ் நாட்டு உல்லாசப் பயணிகள், அதனைப் படமும் எடுத்து விட்டார்களாம்.

புனித புத்தருக்கு (சிலைக்கு) முத்தம் கொடுப்பதா என்று கொதித்த மகிந்த அரசு அவர்களை நீதிமன்றில் நிறுத்தி அபராதமும் ஒத்திவைக்கப்பட்ட சிறைத்தண்டனையும் அளித்துள்ளது.

இலங்கையில் எத்தனையோ வெளிநாட்டுக்காரர்கள் பாலியல் வல்லுறவுக்குட்படுத்தப்பட்டு கொல்லப்பட்டுள்ளனர். இதற்காக யாரையும் தண்டிக்கவில்லை. ஆனால் புத்தருக்கு முத்தம் கொடுத்தவர்கள்..... கடந்த மாத முதல் வாரம், திருமலை நகரிலுள்ள புத்தர் சிலையொன்றின் மீது தனது காலைத் தூக்கிப் போட்ட தெருநாயொன்று ............ அபிஷேகம் நடத்தியுள்ளது.

இராணுவம் வருவதற்கு முன்னர் நல்லவேளை நாய் ஓடிவிட்டது.

## 'நாகதஅ' கொண்டைச் சண்டை; பந்தியிலிருந்தவர்கள் சந்தியில்!

'நாகதஅ' உள்வீட்டுச் சண்டை இப்போது சந்திக்கு வந்துள்ளது. மந்தி(ரி)கள் சபை மாற்றத்தில், பந்திக்காரர் சிலருக்கு கல்தா. லண்டன் ஐபிசி வானொலியில் பதவி பறிபோன ஒருவர் வழங்கிய நீண்ட செவ்வி, அன்று ஜனநாயகவாதிகள் சொன்னதை இன்று நிரூபணமாக்கியுள்ளது. தொடர்ந்தும் பல செவ்விகள் வருமாம். பொறுத்திருப்போம்.......

## நித்தியானந்தர் ஒருபுறம்; கருணாநிதி மறுபுறம்

தமிழக ஊடகங்களை இப்போது ஆக்கிரமித்திருப்பவர்கள் இருவர். ஒருவர் நித்தியானந்தர் என்ற கில்லாடி. அடுத்தவர் மு. கருணாநிதி.

ஆனாலும் கருணாநிதியை முந்துவது நித்தியருக்கு முடியாத விடயம்!

சில ஊடகங்களின் செய்திகளுக்கு இடப்பட்ட தலைப்புகள் பின்வருமாறு இருந்தன:

"ஆ.ராசா எடுத்த ஆதாரம்; கதறும் கருணாநிதி!"
"தி.மு.கவைச் சுற்றும் கிரனைட் பூதம்"
"ரெசோ நாடகம் முடிந்தது; கலைஞரின் வேடமும் கலைந்தது"
"கலைஞர் வீட்டுக்குள் குத்துவெட்டு; அழகிரி அகற்றப்படுவாரா?"

இப்படியாக தொடர்ந்து பல அட்டகாசச் செய்திகள் வந்து கொண்டிருக்கின்றன.

"கருணாநிதி தண்டவாளத்தில் தலை வைத்து நடத்திய போராட்டத்தின் வண்டவாளக் கதை கேட்க வாரீர்!" என்று சீமான் நடத்திய கூட்டம் இன்னொரு புறத்தில் அவரின் துகிலை உரித்து வைத்துள்ளது. "கருணாநிதியின் கபட நாடகம்" என்ற தலைப்பில் பழ. நெடுமாறனின் அறிக்கை அவருக்குச் சூடேற்றியுள்ளது.

## மனிதனின் விஷம் ஏறியதால் நல்ல பாம்பு மரணம்!

தன்னைத் தீண்டிய பாம்பைக் கலைத்துச் சென்ற மொகமட் சல்மோ என்பவன், அதனைப் பிடித்துக் கடித்து தன் கோபத்தைத் தீர்த்துக் கொண்டான்.

அவனிடமிருந்த விஷமேறி அந்தப் பாம்பு மரணமாகிவிட்ட சம்பவம் பற்றி நேபாளத்திலிருந்து வெளிவரும் 'அன்னபூர்ணா போஸ்ட்' என்னும் பத்திரிகை பரபரப்பான செய்தி வெளியிட்டுள்ளது.

Cobra என்று சொல்லப்படும் சாதாரண நல்ல பாம்பே இவ்வாறு மரணித்ததாக அந்தச் செய்தி கூறுகின்றது.

பாம்பின் மரணத்துக்குக் காரணமான மொகமட்டை வைத்தியசாலையில் அனுமதித்துள்ள காத்தமன்டு அரசு, அவரின் உடலில் எவ்வாறு விஷம் வந்தது என்பது பற்றி ஆராய்ச்சி செய்கின்றனர்.

பாம்புக்கே விஷமேற்றிக் கொலைசெய்தவர் என்பதால், இப்போதைக்கு அவரை வீடு செல்ல அனுமதிக்க முடியாது என்றும் தெரிவித்துள்ளனர்.

## வீட்டின் கூரை ஊடாக வழிந்த சுவைத்தேன்

அந்த வீட்டின் கூரைக்குள்ளிருந்து சுவையான தேன் வந்தது. ஆரம்பத்தில் சொட்டுச் சொட்டாக வர ஆரம்பித்த தேன், பின்னர் சுவர்களில் வழிய ஆரம்பித்து, கூரை முழுவதும் நிரம்பிக் காணப்பட்டது.

பிள்ளையார் பால் குடித்த கதைபோல செய்தி பரவத் தொடங்க, அயலவர்கள் வந்து தேனைத் தொட்டு நாக்கில் வைத்து 'உண்மையான தேன்தானா?' என்பதைக் கண்டறிய முற்பட்டனர்.

தேன் விடயம் பிரபல்யமானதால் அரச அதிகாரிகள் வீட்டை சோனையிட்டனர். கூரைக்குள் 80,000 தேன்குளவிகள் கூடு கட்டியிருந்தது தெரியவந்தது.

கூரைக்குள்ளிருந்த நூறு கிலோ கிராம் தேன் மீட்கப்பட்ட இச்சம்பவம் ஒன்ராறியோ தெற்கிலுள்ள Varney என்ற இடத்தில் கடந்த மாதம் இடம்பெற்றது.

**உதாசனன் உலா விருந்து**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்ஸ் 2012 - லண்டன்



லண்டன் நகரின் ஒலிம்பிக்ஸ் போட்டிகள் நடந்துள்ளது. மூன்றாவது முறையாக ஜுலை 27ம் திகதி தொடங்கிய ஒலிம்பிக்ஸ் போட்டிகள் ஓகஸ்ட் மாதம் 12ம் திகதி வரை நடத்தப்பட்டது.

இதனைத் தொடர்ந்து 'பாராலிம்பிக்ஸ்' போட்டிகள் ஓகஸ்ட் 29ம் திகதி ஆரம்பமாகி செப்டம்பர் 9ம் திகதி வரை நடக்கும். இந்த போட்டிகளில் 204 நாடுகள் பங்கேற்க உள்ளன.
இது மரியாதை, திறமை, நட்புணர்வு என்ற ஒலிம்பிக் கோட்பாட்டை குறிக்கும் வகையில் இந்த விளக்கு 3 பக்கங்கள் கொண்டதாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

தங்க நிறத்தில் ஜொலிக்கும் இந்த விளக்கின் உயரம் 800 மி.மீற்றர், எடை 800 கிராம்.
ஒலிம்பிக் சுடர் ஓட்டத்தில் 8000 பேர் இந்த விளக்கை ஏந்திச் சென்றனர். இதில் 8000 துளைகள் இருக்கும் வகையில் வடிவமைத்துள்ளனர்.

இங்கிலாந்து முழுவதும் 8,000 மைல் தூரத்துக்கு சுடர் ஓட்டம் நடைபெற்றது. கிரேக்கத்தில் இருந்து மே 10ம் திகதி ஒலிம்பிக் ஜோதி பிரிட்டனுக்கு கொண்டு செல்லப்பட்டது. பிரிட்டனின் லேண்ட்ஸ் என்ட் பகுதியிலிருந்து மே மாதம் 19ம் திகதி ஒலிம்பிக் ஜோதி ஓட்டம் தொடங்கியது.

கடந்த 3 ஒலிம்பிக் போட்டிகளில் தங்கம் வென்ற பிரிட்டனைச் சேர்ந்த படகுப் போட்டி வீரர் பென் எய்ஸ்லி ஜோதி ஓட்டத்தைத் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில் ஏராளமானோர் பங்கேற்றனர். பிரிட்டன், அயர்லாந்தில் சுமார் 12 ஆயிரத்து 875 கி.மீ. தூரத்துக்கு ஒலிம்பிக் ஜோதி கொண்டு செல்லப்பட்டது. ஒவ்வொரு நாளும் சராசரியாக 115 பேர் சுடரை ஏந்திச் சென்றனர். மொத்த பயண தூரம் 8000 கி.மீ. ஆகும். படகு, கேபிள் கார், பறக்கும் பலூன், சைக்கிள், மோட்டார் சைக்கிள், குதிரை என பல்வேறு வாகனங்களில் ஒலிம்பிக் சுடர் பயணித்தது.

ஒலிம்பிக்ஸ் தொடக்க நிகழ்வுகள் போட்டியை நடத்தும் நாட்டின் பெருமையை பறைசாற்றும் விதமாக அமையும் என்பதால் இம்முறை பிரிட்டன் நகரம் பிரம்மாண்டமாக ஏற்பாடு செய்திருந்தது.
தொடக்க விழா நிகழ்ச்சிகளுக்கு ஓஸ்கர் விருது படமான ஸ்லம்டாக் மில்லியனர் படத்தை இயக்கிய டேனியல் பாய்ல் தலைமை வகித்தார். மைதானத்தை இயற்கையாக வளர்ப்பு விலங்குகள் வாழும் பச்சை பசுமையான இடங்களை போல வடிவமைத்தனர்.

வீரர்களின் அணிவகுப்பு
இதனையடுத்து, அகரவரிசைப்படி ஒவ்வொரு நாட்டு வீரர்களும் ஒன்றன் பின் ஒன்றாக அணி வகுத்து மைதானத்துக்குள் சென்றனர். ஆனால் முதலில் செல்வது பாரம்பரியம் மிக்க கிரீக் அணியும், அதன் பின் அகர வரிசைப்படி மற்ற நாடுகளின் அணிகளும், கடைசியாக போட்டியை நடத்தும் பிரிட்டன் அணியும் சென்றன.

லண்டனில் கோலாகலமாக நடந்து முடிந்த ஒலிம்பிக் போட்டியில் ஒவ்வொரு நாடுகளும் பதக்கங்களை வெல்ல போட்டி போட்டன. 204 நாடுகள் பங்கேற்ற இந்த போட்டியில் முதலிடத்துக்கு அமெரிக்காவும், சீனாவும் போட்டி போட்டன. அமெரிக்கா பதக்கப் பட்டியலில் முதலிடத்துடன் நிறைவுசெய்துள்ளது. 46 தங்கங்கள், 29 வெள்ளிகள், 29 வெண்கலங்களைப் பெற்ற அந்நாடு 104 மொத்தப் பதக்கங்களைப் பெற்றது. சீனா 38 தங்கங்கள், 27 வெள்ளிகள், 22 வெண்கலப் பதக்கங்களோடு மொத்தமாக 87 பதக்கங்களுடன் தங்களது ஒலிம்பிக்கை நிறைவுசெய்தது.

போட்டிகளை நடத்திய நாடான பிரிட்டன் 29 தங்கங்கள், 17 வெள்ளிகள், 19 வெண்கலப் பதக்கங்களோடு மொத்தமாக 65 பதக்கங்களுடன் மூன்றாவது இடத்தை பிடித்தது. ரஷ்யா 24 தங்கங்கள், 25 வெள்ளிகள், 33 வெண்கலப் பதக்கங்களோடு 82 மொத்தப் பதக்கங்களோடு நான்காவதாகவும், தென் கொரியா 13 தங்கங்கள், 8 வெள்ளிகள், 7 வெண்கலப் பதக்கங்களோடு 28 மொத்தப் பதக்கங்களோடு 5வதாகவும் நிறைவுசெய்தன.

கனடா மொத்தம் 18 பதக்கங்களைப் பெற்றது. இதில் ஒன்று மட்டுமே தங்கப்பதக்கம். ஐந்து வெள்ளிப் பதக்கங்கள், பன்னிரண்டு வெண்கலப் பதக்கங்கள். தர வரிசையில் கனடா பதின்மூன்றாம் இடத்தைப் பெற்றது.

ஆசியாவின் இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய நாடுகள் எந்தவிதப் பதக்கங்களையும் பெறவில்லை.

லண்டன் ஒலிம்பிக் போட்டி வண்ணமயமான நிகழ்ச்சிகளுடன் கோலாகலமாக நிறைவு பெற்றது. தொடக்க விழாவின் பிரமாண்டத்துக்கு சிறிதும் குறைவில்லாமல் நிறைவு விழா நடைபெற்றது. கண்ணைக் கவரும் ஒளி வெள்ளத்தில், வாண வேடிக்கைகளும், இசை, நடன நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

30வது ஒலிம்பிக் போட்டியை நடத்தியதன் மூலம் 3 முறை ஒலிம்பிக் போட்டிகளை நடத்திய நகரம் என்ற பெருமையை லண்டன் பெற்றது.

மரதன் போட்டியில் வெற்றி பெற்ற வீரர்களுக்கு நிறைவுவிழாவின் போது பதக்கங்கள் வழங்கப்பட்டன. உகாண்டாவின் ஸ்டீபன் கிப்ரோடிச் தங்கப் பதக்கத்தையும், கென்யாவின் கெபெல் கிரூய், வில்சன் கிப்சாங் கிப்ரோடிச் ஆகியோர் முறையே வெள்ளி, வெண்கலப் பதக்கத்தை பெற்றுக் கொண்டனர்.

ஒலிம்பிக் கொடி விமானம் மூலம் பிரேசிலின் ரியோ டி ஜெனிராவுக்கு கொண்டு செல்லப்பட்டது.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரா. சம்பந்தன்

# கண்ணதாசன் பாடல்களில் தமிழ் இலக்கியங்களின் தாக்கம்!



காலத்தால் அழிக்க முடியாத பல சினிமாப் பாடல்களைத் தமிழ் மக்களுக்குத் தந்தவர் வித்துவான் முத்தையா என்ற பெயரோடு செட்டி நாட்டிலிருந்து சினிமாவுக்கு வந்த கண்ணதாசன் அவர்கள். சிலம்புக்கும் மணிமேகலைக்கும் அடுத்து மாறுபட்ட மதங்களைப் போற்றி இலக்கியம் செய்த புண்ணிய மனிதன் அவர்.

ஆடவந்த தெய்வம் படத்திலே 'செந்தமிழ்த் தேன் மொழியாள்' என்ற பாடலுக்கு எழுதிய சில்லென்று பூத்த சிறு நெருஞ்சிக் காட்டினிலே என்னை நில்லென்று கூறி நிறுத்தி வழி போனாளே என்ற பல்லவி பலராலும் புகழப்பட்டபோது அது என்னுடையது அல்ல. கிராமியப் பாடல் ஒன்றிலிருந்து இருந்து எடுத்தேன் என்று வெளிப்படையாக பேசிய மனிதர் அவர்.

அவர் தான் கற்ற இலக்கியங்களில் இருந்து எத்தனையோ செய்யுட்களை எடுத்து தமிழ்ச் சினிமாப் பாடல்களுடன் கலந்து நல்ல பல பாடல்களைத் தந்தார்' அத்தனையுமே இன்றும் இலக்கிய மணம் வீசி நிற்கின்றன'

நன்னெறி என்ற நீதி நூலிலே சிவப்பிரகாச சுவாமிகள் ஒரு கருத்தைச் சொன்னார். பலவீனமானவர்கள் தாங்கள் பலமானவர்களோடு கூடி நிற்கும் வசதி கிடைத்தால் எந்தப் பலசாலியான பகைவருக்கும் பயப்பட மாட்டார்கள்' இதற்குச் சிவப்பிரகாசர் ஒரு உதாரணமும் காட்டினார். பொதுவாக பாம்புகள் கருடனுக்குப் பயப்படும். ஆனால் சிவபெருமானின் சடாமுடியிலே இருக்கின்ற பாம்பானது சிவபெருமான் கூட இருக்கும் தைரியத்தில் பறவைகளுக்கு அரசனான கருடனைப் பார்த்து ஒரு போதும் பயப்பட மாட்டாது என்றார் அவர்.

மெலியோர் வலிய வரவலரை அஞ்சார்
வலியோர் தம்மைத்தாம் மருவில் - பலிஏர்
கடவுள் அவிசடைமேல் கட்செவி அஞ்சாதே
படர்நிறைப் புள்அரசைப் பார்த்து'

(கட்செவி - பாம்பு புள் அரசு - கருடன்)

சூரிய காந்தி என்ற படத்துக்கு பாடல் இயற்றும் போது கண்ணதாசன் நன்னெறியில் காணப்படும் இந்தச் செய்யுளைக் கையில் எடுத்தார். 'பரமசிவன் கழுத்தில் இருந்து பாம்பு கேட்டது கருடா சௌக்கியமா? யாரும் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டால் எல்லாம் சௌக்கியமே கருடன் சொன்னது அதில் அர்த்தம் உள்ளது' என்று எழுதினார் கண்ணதாசன். இப்பாடல் இன்று கேட்டாலும் மன உணர்வுகளைத் தட்டி எழுப்பும் தன்மையுடன் விளங்குவது மட்டுமல்ல சிவப்பிரகாசரின் நன்னெறியைத் தெரியாதவர்கள் மனத்தில் கூட கண்ணதாசன் பாடலாக அந்தக் கருத்து இடம் பிடித்துக் கொண்டது'

அது போல நளவெண்பாவிலே புகழேந்திப் புலவர் அருமையானதொரு இலக்கியக் காட்சியைக் காட்டுவார். அழகான பெண்ணொருத்தி குளத்திலே மலர் பறித்துக் கொண்டிருந்தாள். பூவிலே இருந்த வண்டு ஒன்று அவள் முகத்தைப் பார்த்து அந்த முகமும் ஒரு தாமரை மலர் என்று நினைத்து முகத்தில் அமரப் போனது. உடனே தன் கையை எடுத்து அந்த வண்டைத் தடுத்தாள் அந்தப் பெண். தன்னைத் தடுத்த கையைப் பார்த்த வண்டு அந்தக் கையும் நீரிலே பூத்திருக்கும் காந்தள் மலர்தான் என்று நினைத்து அந்தக் கையிலே பாய்ந்து இருந்து விட்டது. உடனே அந்தப் பெண் பயத்தினால் நடுங்கி வியர்த்து விட்டாள் என்று அந்தக் காட்சி வரும்.

மங்கை ஒருத்தி மலர்கொய்வாள் வாண்முகத்தைப்
பங்கையம் என்று எண்ணிப் படிவண்டை - செங்கையால்
காத்தாள் அக் கைமலரை காந்தள் என பாய்தலுமே
வேர்த்தாளை காண் என்றான் வேந்து'

இந்தக் காட்சியை வல்லவனுக்கு வல்லவன் படத்துக்கு பாட்டு எழுதும் போது அங்கே கொண்டு வருகின்றார் கண்ணதாசன்' நான் மலரோடு தனியாக ஏனிங்கு நின்றேன் என்று தொடங்கியவர் பொன் வண்டொன்று மலரென்று முகத்தோடு மோத நான் வளைகொண்ட கையாலே மெதுவாக மூட என் கருங்கூந்தல் கலைந்தோடி மேகங்கள் ஆக நான் பயந்தோடி வந்தேன் உன்னிடம் உண்மை கூற' என்று எழுதினார்.

உண்மையிலே செய்தி ஒன்றாக இருப்பினும் புகழேந்தியார் காட்சியில் கண்ணதான் சிறு மாற்றம் செய்து விட்டார். புகழேந்தியார் கருத்தை அப்படியே சிதைக்காமல் பாடலாக்கும் அறிவும் திறமையும் உடையவர் கண்ணதாசன். அப்படியிருந்தும் முழுமையாக இலக்கியச் செய்திகளை பாடல்களில் கொண்டுவர அவரால் முடியவில்லை'

காரணம் மிகவும் வெளிப்படையானது. இசை அமைப்பாளர் தரும் மெட்டுக்குப் பல பாடல்களை இயற்ற வேண்டிய கட்டாயம் அந்தப் பிறவிக் கவிஞனுக்கு இருந்தது. திரைத் துறையில் வர்த்தக ரீதியாக நிலைக்க அதை ஏற்றுக் கொள்ள வேண்டிய தேவையும் அந்தக் கவிஞனுக்கு இருந்தது.

எனவே கிடைத்த மெட்டுக்களோடு தன்னால் முடிந்த அளவுக்கு இலக்கிய நயங்களைத் தொட்டுக் காட்டிக் கொண்டு போனார் கண்ணதாசன். அவர் தொட்டுக் காட்டிய இலக்கியச் செய்திகள் தமிழ்ச் சினிமாப் பாடல்களில் பலநூற்றுக் கணக்கானவை என்பது பலருக்குத் தெரியாது.

பாரதியாரின் பாஞ்சாலி சபதத்தில் நீரை உண்ட மேகம் போல நிற்கும் ஆயிரங்கள் வாரணங்கள் கண்டாய் என்ற கவிதை வரிகளில் இருந்து தோன்றியதே கண்ணதாசனின் நீருண்ட மேகங்கள் நின்றாடும் கயிலையில் நீ வாழ இடமும் உண்டு என்ற திருவிளையாடல் படப் பாடல் வரிகள் ஆகும்'

கண்கள் இரண்டும் அவன் கழல் கண்டு களிப்பன ஆகாதே' என்றார் திருவாசகத்தில் மாணிக்கவாசகர்' கண்கள் இரண்டும் என்று உம்மைக் கண்டு பேசுமோ என்றார் மன்னாதி மன்னனில் கண்ணதாசன்'

ஓடக் காண்பது பூம்புனல் வெள்ளம்' ஒடுங்கக் காண்பது யோகியர் உள்ளம்' என்றார் குற்றாலக் குறவஞ்சியில் திரிகூடக் கவிராயர்' 'ஆடக் காண்பது காவிரி வெள்ளம் அலையக் காண்பது கன்னியர் உள்ளம்' என்றார் கண்ணதாசன்'

மாதா உடல் சலித்தாள் வல்வினையேன் கால் சலித்தேன் என்றார் பட்டினத்தார். பெற்றவள் உடல் சலித்தாள் பேதை நான் கால் சலித்தேன் என்றார் கவிஞர்' பத்தும் பசி வந்திடப் பறந்து போம் என்றாள் ஔவை' பத்தும் பறந்திடும் பசி வந்தால் மறந்திடும் என்றார் கவிஞர். கொடிது கொடிது வறுமை கொடிது' அதனிலும் கொடிது இளமையில் வறுமை என்றாள் ஔவை' இளமையில் கொடுமையிந்த வறுமையம்மா என்றார் கண்ணதாசன். இதையெல்லாம் சரஸ்வதி சபதம் படத்தில் வரும் தாய் தந்த பிச்சையிலே பிறந்தேனம்மா என்ற ஒரே பாடலில் காணலாம்.

அது போல கலிங்கத்துப் பரணி குறுந்தொகை நாலடியார் சித்தர் பாடல்கள் நாலாயிரத் திவ்வியப் பிரபந்தம் கம்பராமாயணம் திருக்குறள் முத்தொள்ளாயிரம் என்று எத்தனையோ தமிழ் இலக்கிங்களின் தாக்கத்தினைக் கண்ணதாசன் பாடல்களில் நாம் காண முடியும்'●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



குயின்ரஸ் துரைசிங்கம்

# வேலையில்லா இளையவர்!

இந்தவாரம் இங்கிலாந்தில் வெளியான ஓர் ஆய்வறிக்கை, மேற்குலகில் வாழ்கின்ற பல பெற்றோருக்கும் ஒரு முக்கிய செய்தியைக் கொடுத்திருக்கிறது. அங்கு நடைபெற்ற Association of Graduate Recruiters conference எனும், இளம் பட்டதாரிகளுக்கான ஆய்வரங்கு ஒன்றில், மாணவர்கள் தங்கள் படிப்பை முடித்த பின்னர் எத்தகைய சூழ்நிலையைச் சந்திக்கிறார்கள், எப்படி அவர்கள் தங்களது சிக்கல்களிலிருந்து சுதாகரித்துக் கொள்கிறார்கள் போன்ற பல்வேறு விடயங்களும் ஆராயப்பட்டபோது, இவர்களது பெற்றோர்கள் இந்த புத்தம் புதிய பட்டதாரிகளை எப்படி எடை போடுகிறார்கள் என்ற விடயமும் வெளிச்சத்திற்கு வந்திருக்கிறது.

கல்விக்கான அரச நிதிக்கடனைப் பெறுவதால் பாரிய கடன் சுமைகள் ஒருபுறம், தங்களது சொந்தச் செலவுகளைக் கட்டுப்படுத்தத் தவறியதால், மேலதிக நிதிச் சுமைகள் மறுபுறம், உடனடியாக வேலை கிடைக்காததால் பெற்றோரின் திட்டும் ஏச்சும் தண்டனைகளும் இன்னொரு புறம், காதல் பிரச்சனை அல்லது காதலிக்க யாருமில்லாததால் மன அழுத்தம் என இன்னோரன்ன பல்வேறு பிரச்சனைகளுக்கு முகம்கொடுத்தபடி, ஒரு மாணவர் தனது படிப்பை நிறைவு செய்கிறார். கல்லூரியோ பல்கலைக்கழகமோ அல்லது தனியார் கல்விக்கூடமோ, படிப்பை நிறைவு செய்யும்போது, மாணவருக்கு அதிக தலையிடிகளையும் சுமைகளையுமே உடனடிப் பரிசாக விட்டு வைக்கிறது.

இப்படி பல்வேறு சுமைகளோடு வெளியேறும் மாணவர்களை, அவர்களது பெற்றோரில் கணிசமானோர் புரிந்து கொள்வதே இல்லை என்று குறை கூறுகிறது இந்த ஆய்வு.

இப்படி கடன் சுமைகளுடனும், மன அழுத்தத்துடனும், ஏனைய பல்வேறு தனிப்பட்ட பிரச்சனைகளோடும் வெளியேறும் மாணவர்கள், அப்படியே பிரச்சனைகளுடன் நிரந்தரமாக வாழ்ந்து விடப்போவதில்லை என்று வாதாடுகிறது இந்த ஆய்வு நிறுவனம். ஏனெனில், எத்தனை பிரச்சனைகளோடு தங்கள் படிப்பை முடித்துக் கொண்டாலும், தற்கால மாணவர் உலகம், மிகவும் சாதுரியமும் சாணக்கியமும் நிறைந்ததாக இருப்பதால், பெரும்பகுதி மாணவர்கள் தங்கள் சவால்களை விவேகமாகச் சமாளித்து விடுகிறார்கள். நாளடைவில் வேலை ஒன்றைத் தேடிக் கொள்ளும் இவர்கள், அதே வேகத்தில் தங்கள் வாழ்க்கையின் எதிர்காலத்தையும் ஒழுங்காக திட்டமிட ஆரம்பித்து விடுகிறார்கள். மிகவும் நேர்த்தியான திட்டமிடலில், தங்களது காப்புறுதி, தங்களுக்கான நிரந்தர வாழ்விடம், தங்களது எதிர்காலத்திற்கான சேமிப்பின் ஆரம்பம் என்று, கடுகதியில் இளையவர்கள் முன்னேற ஆரம்பிக்கிறார்கள் என்கிறது இந்த ஆய்வு.

எனினும், இப்படி விரைவில் தங்களை அவர்கள் சுதாகரித்துக் கொள்வார்கள் என்பதைப் புரியாதவர்களாக, அவசியமின்றி மேலதிக சிக்கல்களைக் கொடுப்பவர்கள் இவர்களது பெற்றோர்களே என்கிறது இந்த ஆய்வு. இந்த இளையவர்களின் பெற்றோர்கள், இவர்களுடன் ஒரு சீரிய உறவைப் பேண வேண்டுமென்பதை மறந்து, அவர்களிடம் அளவுக்கதிகமாக கறாராக நடந்து கொள்வதுடன், படிப்பை முடித்த மறுநாளே வேலை எடுக்கவில்லை என்ற நச்சரிப்பு, வேலை எடுப்பதற்குப் போதிய முயற்சியெடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டு, 'மாடு மாதிரி வளர்ந்தும் வீட்டில் உட்கார்ந்து சோறு தின்று பொழுதைக் கழிப்பதான' கூச்சலுமென, அவசியமின்றி உறவில் விரிசலை உருவாக்கி வருகிறார்கள்.

மேற்குலக பாடசாலை வாழ்க்கையில், ஒரு மனிதன் தன் எதிர்காலத்தை எப்படியெல்லாம் உருவாக்கிக் கொண்டு வெற்றி பெற வேண்டுமென்பதை, மிகத் தெளிவாகவே கற்பித்து விடுகிறார்கள். இதனால், நீண்ட பாடசாலைக் காலத்தையும், உயர்கல்வி பெற்ற மனக் களைப்பையும் போக்கிக்கொள்ள, சிறிய இடைவெளி எடுத்துக் கொள்ளும் இளையவர்கள், அதே காலப்பகுதியில் காதல், நண்பர் வட்டம், டிஸ்கோ, சூதாட்டம் (கசினோ) என்று சுற்றிச் சுழன்றாலும், இவற்றையெல்லாம் ஒரு தற்காலிக இளைப்பாறும் சிறிய காலப்பகுதியாகவே அவர்கள் பார்க்கிறார்கள் என்று கூறும் இந்த ஆய்வு, இந்தக் காலப்பகுதியில் பெற்றோர் சற்று மேலதிக புரிதலுடன் நடந்து கொள்வதால், உறவில் நிரந்தர விரிசல் விழாமல் காப்பாற்ற முடியும் என்றும் ஆலோசனை வழங்குகிறது.

இந்த இளையவர்கள், தங்களைச் சுதாகரித்துக்கொண்டு தமக்கான தொழில் வாய்ப்பைப் பெற்று, தமக்கான எதிர்கால வாழ்வை உறுதி செய்யும் தருணத்தில், தமது பெற்றோருடனான உறவு நிலையில் திருப்தி இல்லாதிருந்தால், அது ஒரு ஆபத்தான பிரிவை உருவாக்கி விடலாம். ஒருவேளை அவர்கள் நிரந்தரமாக பெற்றோரைவிட்டு தூர விலகிச் சென்று விடலாம், சிலவேளை அவர்கள் தமது பெற்றோரை தங்களது நிரந்தர எதிரிகளாகவும் நினைத்து விடலாம். அவசியம் தேவைப்பட்ட நேரத்தில் தமக்கு உதவிடாத தமது பெற்றோர் மீது ஒருவித காழ்ப்புணர்வு வந்து விட்டால், அதுவே அவர்களை நிரந்தரப் பகையாளிகளாகவும் மாற்றி விடலாம். எனவே, பெற்றோர் தங்களது பிள்ளைகளின் கல்வி நிறைவடைந்த பின்னர் உருவாகும் வெற்றிடத்தில், அவர்களுக்கு ஆதரவும் ஆறுதலும் கொடுக்கா விட்டாலும், அவர்களது மன உழைச்சலையும், மனச் சோர்வையும், வேலை கிடைக்காததால் உருவாகும் வெறுப்பையும், தான் அடைய முடிந்த காதலன் அல்லது காதலி தனக்குக் கிடைக்காததால் உருவாகும் மன விரக்தியையும் புரிந்துகொண்டு, அதற்கேற்ப ஓரளவு புரிதலுடன் வாழ்வதே சரியானது என்று தெரிவிக்கும் இந்த ஆய்வு, மேற்குலகில் கல்வி கற்கும் இளையவர்களில் பெரும்பகுதியினர், தங்களது எதிர்காலத்தை சீராக அமைப்பதற்கான போதிய பயிற்சியையும் அறிவையும் ஆளுமையையும் பெற்றிருக்கிறார்கள் என்று கண்டறிந்து உறுதி செய்திருக்கிறது. அத்துடன் நிற்காமல், இந்த இளையவர் உலகின் வளர்ச்சியைப் புரிந்துகொள்ளாமல் குழம்பிக் கொள்ளும் பெற்றோர், அதே பிள்ளைகளுக்கென சொத்தை மட்டும் சேர்த்து வைத்தாலும், அந்தச் சொத்துக்கள் அனைத்தும் பிள்ளைகளால் நிராகரிக்கப்படலாம் என்பதையும் எண்ணிப் பார்ப்பது அவசியமென எச்சரிக்கிறது.

இருள்நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு (திருவள்ளுவர்)

மயக்கத்திலிருந்து விலகி, குற்றமற்ற மெய்யை உணரும் நிலையை அடைந்தவர்க்கு.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



முருகவே பரமநாதன் (ஆழ்கடலான்)

# கரும்பலகையும் கற்பலகையும்

ஆசிரியரோடு தொடர்புடையது கரும்பலகை, மாணவனுக்குரியது கற்பலகை (Slate). Chalk & Talk ஆசிரியரின் கற்பித்தல் நெறி. சோக் கரும்பலகையில் எழுத உதவும் கருவி. மாணவனின் கற்பலகையில் எழுதக் கற்கூர் பயன்படும். மாணவர்களின் வேலை Read & writing, மூன்றாந்தரம்வரை கற்பலகையும் பென்சிலும் மாணவனின் கற்கை நெறிக்கான உபகரணங்கள். வீட்டுப் பாடங்கள் எழுதுதல், வாய்ப்பாட்டை எழுதிப் பாடஞ் செய்தல் எல்லாமே அந்தச் சிலேற்றிலேதான்.

மூன்றாந்தரம் சித்தியெய்தினால் வகுப்பு நான்கில் கற்பலகையும் கற்பென்சிலும் எம்மைவிட்டு விடைபெற்றுவிடும். கொப்பியும், லெட் பென்சிலும் எம் சொத்து. இரட்டை றூள் கொப்பியில் எழுத்துறுப்பு, அச்சுக் கொப்பியில் வடிவமைப்பு இடம்பெறும். அக்காலக் கற்கை நெறியில் எழுத்துறுப்புக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

கொன்வென்ருகளிலே mothers & sisters ஆசிரியர்களாய்ச் சேவையாற்றும்போது வடிவாய் எழுதப் பழக்குவர். நான்காம் வகுப்பு எழுது சாதனங்களில் ஒரு திருப்புமுனை. மையும் எழுதுகோலும், மையைத் தொட்டு, தொட்டு எழுதும் பழக்கம் பயிற்சியானது. மையொற்றித்தாள் பயன்படுத்தப்படும். மைக்கட்டி கடையிலே விற்பர். நாமதை வேண்டிக் கரைத்து வைத்திருப்போம். ஐந்து சதத்துக்கு மையும் போத்தலும் வேண்டலாம்.

இப்போ (Exercise copy) பயிற்சிக் கொப்பிகள் பயன்படுத்தப்படும். அக்காலத்திலே J.S.C. (Junior School Certificate) அரசாங்கப் பரீட்சையும், மை பேனை கொண்டு எழுதினோம். இதைத் தொடர்ந்து S.S.C. ஈராண்டு படித்து பகிரங்கப் பரீட்சை எழுதும்போதுகூட இந்தக் கட்டை வண்டிப் பயணம் முடியவில்லை. மை தட்டுப்பட்டு வெள்ளை வேட்டியை அழகுபடுத்தாமலும் இல்லை. இதற்கிடையே எழுதும் நிப் கூட கண்டபடி பாவிக்க முடியாது. "G" நிப்தான் பாவிக்க வேண்டும். றிலீவ் நிப், றெட்கிங் நிப் பாவிக்க ஆசிரியர்கள் உத்தரவு தரமாட்டார்கள். ஆங்கிலேயரின் ஆட்சிக்காலம் அது.

பகிரங்கப் பரீட்சைக்கு எல்லாம் மைப் பேனையையே பாவித்தோம். ஆசிரிய கலாசாலை புகுமுகத் தேர்வுக்கும் மைப் பேனையையே பயன்படுத்த வேண்டும். அக்காலத்திலே நீதிபதியும் பேனையை பாவித்தார். தூக்குத் தண்டனை விதித்தபின் பேனையை குத்தி முறிப்பதாக ஒரு மரபு இருந்தது. இப்படிப் படிப்படியாய் எம்மைச் சுதாகரித்துக் கொண்டு வாழ்ந்த நாம் Black Bird பேனை பாவித்தோம்.

குயிங் மை சிறந்த மை. இருந்தும் ஆசிரிய கலாசாலை இறுதித் தேர்வுக்கு எழுதும் பேப்பர் புத்தகம் போல் கட்டுக் கட்டாகத் தரப்படும். அப்பரீட்சையையும் மை தொட்டு எழுதுவதே அக்காலச் சட்டம். இந்த வரலாறு சொல்லும் எழுதுகோல்களைப் பேசும் பேனாக்கள் என்று இன்று கூறுகின்றனர். தபால் எழுதும்போது கூட மைப் பேனையைப் பாவித்தோம். திறமான பார்க்கர் பேனைகள் விற்பனைக்கு வந்தன. Fiftyone பார்க்கர் பேனை ஐம்பத்தொரு ரூபா.

குயிங் மை போல, ஸ்வான்கீகா மையும் உயர்ந்த மைகள் ஆகும். இப்படியொரு வரலாறு சொல்லும் பேனை மரபை எம்மால் மறக்க முடியுமா? அப்பாடீ, பக்கம் பக்கமாய் எழுதலாம். இது ஒரு மாதிரி (sample).

அடியேன் எழுத்துத் துறையிற் பிரவேசிக்கும் காலகட்டத்தில் போல்பொயின்ற் பேனை வந்துவிட்டன. யப்பானில் உருவான Pilot பேனை வெகு அழகாக எழுதும். அது மூன்றரை ரூபாவில் இருந்து நாலரை ரூபாவரை விற்பனையாகும். ஒரு டசின் நாற்பத்து இரண்டு ரூபா. இப்போ அச்சடிப்பதிலும், புத்தக வடிவமைப்பிலும் புதிய உத்திகள் நடைமுறையில் வந்துவிட்டன. புத்தகங்களைச் குறுந்தகட்டில் (CD) பதிவு செய்யும் வாய்ப்பும் வந்துவிட்டது குறிப்பிடத்தக்கது.

எமது கைவண்ணங்களைப் பத்திரிகைகளிலே உலாவ விட்டுப் பார்த்து அகமகிழ்வதில் ஒரு அலாதிப் பிரியம் எம் போலியர்க்கு. யாழ்ப்பாணத்திலிருந்து வந்த ஈழநாடு, முரசொலி போன்ற கிழமை வெளியீடுகளில் எம் ஆக்கங்களை வெளியிடச் சுமைதாங்கியாய் இருந்தவர்கள் பத்திரிகாசிரியர்கள். இந்த வகையில் எஸ்.தி. மற்றும் சசிபாரதி போன்றவர்களை எப்படி மறப்பது. கம்பியூட்டர் உலகில் வாழும் அடியேன் இன்றும் பழைய பாணியிலேயே இயங்கிக் கொண்டிருக்கிறேன் என்றால் வெட்கப்படவில்லை யான். ஆத்மஜோதி, அன்பு நெறி, அருளொளி, ஞானச்சுடர், சைவ நீதி போன்ற சஞ்சிகைகளில் என் ஆக்கங்கள் பதிவாய் உள்ளன. நானும் ஒரு தரமான எழுத்தாளன் என எனக்குள்ளே மகிழ தமிழர் தகவலே களம் அமைத்துத் தந்ததென்ற உண்மையை எப்படி மறப்பது? எப்படி மறைப்பது?

எங்கும் இன்பம் தழைக்கட்டும்
எல்லாரும் நன்றாய் உழைக்கட்டும்.●



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



டாக்டர் எம். கே. முருகானந்தன்

# 'ஒத்தடம்'

காயம் தருமென்பதை
உன்
உதடுகள் தானடி
உறுதிப் படுத்தின'

எனக் கவிதை புனைந்தார் ஜோசப் சேவியர் தாசப்பன். இதழோடு இதழ் பிணைந்து ஆசையோடு கொடுக்கும் முத்தமானது ஒத்தடம் கொடுப்பது போன்று உள்ளத்திற்கு இதமானதுதான். ஆயினும் அங்கு வேட்கை மிகும்போது காயங்களும் ஏற்பட்டுவிடலாம் என்கிறார்.

ஆம்' உதடுகள் என்றால் எமக்கு எப்பொழுதும் நினைவுக்கு வருபவை காதலும் காமமும் முத்தங்களும்தான். இதனால்தான் அது கவிஞர்கள், கதாசிரியர்கள் போன்றவர்களின் கற்பனையின் ஊற்றாக எப்பொழுதும் இருந்து வந்திருக்கிறது.

ஆனால் அண்மைக் காலங்களில் அது படைப்பாளிகளுக்கு அப்பால் பல்வேறு தரப்பட்டவர்களைக் கவர்ந்திழுக்கத் தொடங்கியிருக்கிறது.

விஞ்ஞானிகள், நீதித்துறை, சட்ட மருத்துவர்கள் ஏன் கடுகடுப்பான பொலீஸ்காரர்களையும் தான். துப்புத் துலங்காத கொலை வழக்கில் குற்றவாளியைக் கண்டுபிடிப்பதற்கும் இது உதவியிருக்கிறது. லிப் ஸ்டிக் தயாரிப்பாளர்களைக் கவர்ந்திருப்பது மற்றொரு சமாச்சாரம். அதற்குக் காரணம் என்ன? உதடுகளில் உள்ள மென்கோடுகள்தான். உதட்டின் மேற்பகுதி முற்று முழுதாக வழுவழுப்பானதல்ல. அதில் மென்மையான பல திட்டுகளும் பள்ளங்களும் உள்ளன. இவை தமக்கேயுரிய சிறப்பியல்புடைய வடிவமைப்பைக் கொண்டிருக்கின்றன. இவற்றை அச்சு எடுக்க முடியும். அவ்வாறு எடுப்பதை உதட்டு அச்சு (Lip Print) என்கிறார்கள்.

எழுத முடியாதவனது ஒப்பத்திற்குப் பதிலாக எவ்வாறு பெருவிரல் அடையாளம் பெறப்படுகிறதோ அவ்வாறே உங்கள் உதட்டு ரேகைகளையும் அச்சு எடுக்க முடியும். அதை பயன்படுத்தவும் ஆராயவும் செய்கிறார்கள். அதைக் கொண்டு சில சிக்கல்களைத் தீர்க்கவும் முடிகிறது. அவ்வாறு உதட்டு அச்சை ஆராய்வது ஒரு கற்கை நெறியாகவும் வந்துவிட்டது.

Cheiloscopy என்பது அதன் பெயராகும். உண்மையில் cheilo என்றால் உதடு என்று அர்த்தம். மேலைத்தேய மருத்துவத்திலுள்ள பெரும்பாலான சொற்கள் கிரேக்க மொழியிலிருந்து வந்தவை. இதுவும் அவ்வாறானதே. அதனை ஆராய்வு செய்பவர்களை cheiloscopists என்கிறார்கள். உதடுகளின் வரிவடிவை முதல் முதலில் 1902 ம் ஆண்டிலேயே அவதானித்து அதனை விபரித்து பதிவு செய்தவர் மனிதவியல் ஆய்வாளரான திரு பிஸர் (R.S. Fischer) ஆகும். இருந்தபோதும் அதனால் மனித வாழ்விற்கு பயன்பாடுகளும் உள்ளன என்பதை உணர சுமார் 50-60 ஆண்டுகள் கழிய நேர்ந்தது.

அதன் பயன்பாடு நோக்கிய முன்னோடி ஆய்வைச் செய்து அடிப்படை உண்மைகளை வெளியிட்டவர்கள் யப்பானைச் சேர்ந்த ஆய்வாளர்கள்தான். டோக்கியோ பல்கலைக்கழகத்தைச் சார்ந்த யாசுவோ Tsuchihashi மற்றும் Tazuo சுசுகி ஆகியோர் 1,364 நபர்களின் உதடுகளை ஆராய்ந்து பார்த்தார்கள். மனித உதடுகளின் சிவப்பு பகுதியிலுள்ள வரிவடிவங்கள் ஒவ்வொரு மனிதனுக்கும் தனித்துவமும் பிரத்தியேகமுமானவை என்பதை நிறுவினார்கள்.

மற்றொரு விடயமும் சுவாரஸ்யமானது. இது பாலினம் சார்ந்தது.

ஒரு உதட்டு அச்சு ஆணினதா அல்லது பெண்ணினதா என்பதைப் பிரித்து அறிய முடியுமா என்பதைப் பற்றியும் மற்றொரு ஆய்வு நடந்துள்ளது.இது இந்தியாவின் மீரட்டில் உள்ள சுபார்தி பல்மருத்துவ கல்லூரியில் செய்யப்பட்டிருக்கிறது. இவ் ஆய்வில் பெண்களின் 20ல் 18யும், மற்றும் 20 ஆண்களில் 17 யும் பாலின ரீதியாக அவர்களால் அடையாளம் காண முடிந்துள்ளது. இது நம்பிக்கை அளிக்கும் செய்தியாகும்.

இந்த முடிவுகளின் தொடர்ச்சியாகவே சட்ட மருத்துவத்தில் இன்று உதட்டு அச்சுவிற்கு ஒரு இடம் கிடைத்துள்ளது. ஆனால் இதில் ஒரு பிரச்சனை உள்ளது. இந்த வரிவடிவங்கள் மிகவும் நுண்ணியமானவை. மரணத்திற்குப் பின்னர் இவற்றில் மாற்றங்கள் ஏற்படுகின்றனவா? மாற்றங்கள் உண்டெனில் அவை எப்படியான மாற்றங்கள் என்பதேயாகும். இதைக் கண்டறிவது குற்றவியல் துறைக்கு மிகவும் அவசியமானது. ஆனால் இதைப் பற்றிக் கண்டறிவதில் ஒரு பின்னடைவு ஏற்பட்டது. அது அறிவியல் ரீதியான பின்னடைவு அல்ல.

ஒப்பீட்டு ஆய்விற்குத் தேவையான எண்ணிக்கை கிட்டாததேயாகும். பிரேத அறையை வந்தடையும் சடலங்களினது உதட்டு அச்சுகளை, அவை உயிருடன் இருந்த காலத்து உதட்டு வரிவடிவங்களுடன் ஒப்பீடு செய்வதற்கு போதிய எண்ணிக்கையான மாதிரிகள் ஆய்வாளர்களுக்கு கிடைக்கவில்லை என்பதே அதுவாகும். காலகதியில் போதியளவு மாதிரிகள் கிடைக்கும்போது இது பற்றிய தெளிவான அறிவு கிட்டுமென நம்பலாம். உதட்டு வரிவடிவங்களைப் பெறும்போது மற்றொரு பிரச்சனை உதட்டுச் சாயங்களால் ஏற்பட்டது. நீண்ட காலம் அழியாமல் தமது சாயங்களை விட்டுச் செல்லும் புதிய உதட்டுச் சாயங்களாலேயே இது ஏற்பட்டது. இவை விட்டுச் செல்லும் தடங்கள் காரணமாக இயற்கையான உதட்டு அச்சுகளை தெளிவான அச்சுகளாக எடுப்பதில் பிரச்சனைகள் ஏற்படுகின்றன.

ஸ்பெயின் நாட்டின் வாலென்சியா பல்கலைக்கழகத்தின் ஆய்வு இதற்கு விடை கண்டது. நைல் ரெட் என்ற நிறமியைப் பயன்படுத்தி உதட்டுச் சாயங்களால் மறைந்திருக்கும் உதட்டு ரேகைகளை சரியாகக் கண்டறிய முடியம் என்பதை வெளிப்படுத்தினார்கள். உதடுகள் இரகசியம் பேச வல்லன. பேசும் அந்த உதடுகளிலும் பல பேசாத இரகசியங்கள் இன்னமும் ஒளிந்து மறைந்துள்ளன. இவற்றை ஆய்ந்து கண்டறிவது விஞ்ஞானத்திற்கு சவாலாக இருந்தபோதும் பல முடிச்சுகளை அவை தமது விடாமுயற்சியால் தொடர்ந்து அவிழ்த்து வருகின்றன.

போர்த்துக்கேயத்தைச் சார்ந்த ஆய்வாளர்கள் உதட்டு வடிவங்களை இனமாதிரிகளாக தொகுத்தறியும் முயற்சியில் கடுமையாக உழைத்து அதில் தாம் கண்டறிந்தவற்றை ஆய்வுக் கட்டுரையாக வெளியிட்டிருக்கின்றனர். ஆயினும் அவர்களுக்கும் ஒப்பீட்டுப் பார்ப்பதற்கான முன்னைய மாதிரிகள் இல்லாமை ஒரு பிரச்சனையாகவே இருக்கிறது.

எதற்கும் முத்தமிடுவதில் அவதானமாக இருங்கள். உங்கள் உதட்டு அச்சு ஒரு வேளை உங்களுக்கு எதிரான சாட்சியமாக ஒரு காலத்தில் மாறலாம்.●





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நட்புத் திலகம்' கதிர் துரைசிங்கம் கால் நூற்றாண்டு சமூகப்பணிக்கு பாராட்டு




'கதிர்' என்று பலராலும் அன்புடன் அழைக்கப்படும் கதிர் துரைசிங்கம் அவர்கள் கனடாவில் கால் நூற்றாண்டு காலம் ஆற்றிய சமூகப் பணிகளை வியந்து அடக்கமான பாராட்டுபசார விழாவொன்று கடந்த மாதம் நடத்தப்பட்டது. கனடாவில் இசைப்பணியாற்றி வரும் பாரதி கலைக்கோவில் சார்பில் அதன் நிறுவனர் திரு. மதிவாசனின் முன்னெடுப்பிலான இவ்விழா ஆகஸ்ட் பன்னிரண்டாம் திகதி பிற்பகல் ஸ்காபரோ ஐயப்பன் ஆலய மண்டபத்தில் நடைபெற்றது. உரைகளும் பாடலுமாக இணைந்து நடைபெற்ற இவ்விழாவில் கதிர் துரைசிங்கம் அவர்கள் இணைந்து பணியாற்றிய அமைப்புகளின் பிரநிதிகள், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள், நண்பர்கள் என்று வெவ்வேறு துறைசார்ந்தவர்கள் சிறப்புரைகள் ஆற்றினர். கதிர் துரைசிங்கம் கல்வி கற்ற தெல்லிப்பளை மகாஜனக் கல்லூரியின் முன்னாள் அதிபர் பொ. கனகசபாபதி விழாவுக்குத் தலைமை தாங்கினார். அந்தணப் பெருமக்கள் துரைசிங்கம் தம்பதியருக்கு மலர்மாலை சூட்டி, பட்டாடை போர்த்து விழாவை மங்கலகரமாக ஆரம்பித்து வைத்தனர். 'கதிர் உலா' என்ற பெயரில் அவரது சேவைகளைப் பாராட்டும் பல கட்டுரைகளைத் தாங்கிய மலரொன்றும் வெளியிடப்பட்டது. விழா நாயகரின் ஏற்புரையைத் தொடர்ந்து இரவு விருந்துடன் விழா நிறைவெய்தியது.














படங்கள்:
**வேலா சுப்பிரமணியம்**

20ஆம் பக்கம் வருக






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒலிம்பிக்ஸ் - கனடாவின் ஒரேயொரு தங்கம் றோஸி



லண்டனில் கடந்த மாதம் நிறைவுற்ற ஒலிம்பிக்ஸ் போட்டியில் கனடாவுக்கான ஒரேயொரு தங்கப் பதக்கத்தைப் பெற்றுக் கொடுத்தவர் றோஸி என அழைக்கப்படும் றோசன்னா மக்லெனன் (Rosannagh MacLennan). ஒன்ராறியோவின் கிங் நகரத்தைச் சேர்ந்தவரான றோஸி Trampoline போட்டியில் தங்கப் பதக்கத்தை வென்றார். 2008ஆம் ஆண்டு சீனாவில் நடைபெற்ற ஒலிம்பிக்ஸில் trampolineல் தங்கப் பதக்கம் வென்ற He Wenna என்பவரை இவ்வருடம் றோஸி வென்றது முக்கிய சாதனையாகும். "இதுவரை நான் பெற்ற புள்ளிகளில் இம்முறைதான் ஆகக்கூடிய புள்ளிகளைப் பெற்றேன்" என்று கூறும் றோஸி, தமக்கு வழங்கப்பட்ட தங்கப் பதக்கத்தை இரண்டு நாட்களாகத் தமது கழுத்தில் அணிந்திருந்ததோடு அடிக்கடி அதனை முத்தமிட்டவராகவும் காணப்பட்டார். 2005, 2009, 2011 ஆகிய மூன்று ஆண்டுகள் trampoline போட்டிகளில் கனடிய தேசிய சாம்பியனாக இவரே தெரிவானது குறிப்பிடத்தக்கது.

# ஒன்ராறியோ வாவியை நீந்திய இளம் சாதனையாளர் ஆன்

ஒன்ராறியோ வாவியைத் தமது பதினான்கு வயதில் நீந்திக் கடந்து, ஆகக் குறைந்த வயதில் நீந்தி முடித்தவர் என்ற சாதனையை நிகழ்த்தியுள்ளார் ஆன் என்றழைக்கப்படும் அனலிஸ் கார் (Annaleise Carr) என்னும் கனடிய மாணவி. 52.5 கிலோ மீட்டர் நீளமுள்ள ஒன்ராயோ வாவியை இவர் நீந்திக் கடக்க எடுத்த நேரம் 27 மணித்தியாலங்கள். 1954ஆம் ஆண்டு மர்லின் பென் என்ற சிறுமி தமது பதினாறாவது வயதில் ஒன்ராறியோ வாவியை நீந்திக் கடந்த சாதனை இவரால் முறியடிக்கப்பட்டுள்ளது. புற்று நோயினால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு உதவுவதற்கான Camp Trilliun நிதிக்கு உதவுவதற்காகவே இந்த முயற்சியில் ஆன் இறங்கினார். இதற்காக முப்பதாயிரம் டாலர்களைச் சேகரிப்பது இவரது ஆரம்ப இலக்காக இருந்தது. பின்னர் இத்தொகை ஐம்பதாயிரம் டாலர்களானது. இறுதியில் ஒரு லட்சத்துப் பதினையாயிரம் டாலர்களைச் சேகரித்து அதிலுமொரு சாதனை புரிந்தார். இதனால் புற்று நோயினால் பாதிக்கப்பட்ட 115 சிறுவர் பயன் பெறலாம்.



# ராதிகாவுக்கு வி. கே. கிருஷ்ணமேனன் நினைவு விருது



கனடிய நாடாளுமன்றத்தின் இளைய எம். பிக்களில் ஒருவரான ராதிகா சிற்சபைஈசனுக்கு இந்தியாவின் வி. கே. கிருஷ்ணமேனன் விருது வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் தமிழர்கள் உட்பட்ட சிறுபான்மையினர் மீதான அடக்குமுறைக்கு எதிராகவும் மற்றும் மனித உரிமைகள் மேம்பாட்டுக்காகவும் ஆற்றிய சேவைகளை மதித்து இந்த விருதுக்கு ராதிகா தெரிவாகியுள்ளார். ஜவஹர்லால் நேருவின் அமைச்சரவையில் பாதுகாப்பு அமைச்சராகவிருந்த கிருஷ்ணமேனன் பெயரால் அமைந்த நிறுவனம் 2006ஆம் ஆண்டிலிருந்து இந்த விருதினை வழங்கி வருகின்றது. அரசியல், பொருளாதாரம், இலக்கியம், அறிவியல், மனிதஉரிமை போன்ற துறைகளில் சிறப்பாக இயங்குபவர்களுக்கு இந்த விருது வழங்கப்படுகின்றது. என். டி. பி. கட்சியைச் சார்ந்த ராதிகா சிற்சபைஈசன் ஸ்காபரோ றூஜ்றிவர் தொகுதியின் எம்.பி. இவரே கனடாவில் தெரிவான முதலாவது தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்.

# சுமங்களா கைலாசபதி மிச்சிக்கன் நகரசபை உறுப்பினர்

அமெரிக்காவின் மிச்சிகன் மாநிலத்திலுள்ள ஆன்ஆபர் நகரசபைக்கு கடந்த மாதம் ஏழாம் திகதி நடைபெற்ற தேர்தலில் இலங்கைத் தமிழரான சுமங்களா கைலாசபதி வெற்றி பெற்றுத் தெரிவாகியுள்ளார். ஜனநாயகக் கட்சியின் வேட்பாளராகப் போட்டியிட்ட இவர், முன்னரும் இதே நகராட்சித் தேர்தலில் போட்டியிட்டாராயினும் அப்போது தோல்வியடைந்தார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974ஆம் ஆண்டில் ஓர் வளாகமாக ஆரம்பிக்கப்பட்டபோது அதன் முதலாவது தலைவராக நியமிக்கப்பட்ட தமிழ்த்துறைப் பேராசிரியர் கே. கைலாசபதியின் புதல்வி இவர். ஆன்ஆபரில் கடந்த இரண்டு தசாப்தங்களாக வாழ்ந்து வரும் சுமங்களா (45 வயது) அரசியல் விஞ்ஞானம், பொருளியல் ஆகியவற்றில் பட்டப்பின் படிப்புகளை மேற்கொண்டவர். கிழக்கு மிச்சிக்கன் பல்கலைக்கழகமொன்றில் விரிவுரையாளராகப் பத்து வருடங்கள் கடமையாற்றியபின், தற்போது அங்குள்ள நிறுவனமொன்றில் அங்கீகாரம்பெற்ற கணக்காளராகப் பதவி வகிக்கின்றார். கிரி யோகரட்ணம் என்பவரைத் திருமணம் புரிந்த இவருக்கு இரண்டு புதல்வர்கள் உள்ளனர்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'நட்புத் திலகம்' கதிர் துரைசிங்கம்
# கால் நூற்றாண்டு சமூகப்பணிக்கு பாராட்டு









• Loans • Mortgages • Insurance Claims • Traffic Tickets •

JRB Universal Inc.
Almost All Services Available

647 289 6164



R.R. Rajkumar
B.Com (Hons), M.B.A.

Scholarship Plan [RESP]

Any Referral Service

• Credit Counseling • Accounting & Tax Services •



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



நக்கீரன்

# சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம்

58

மாந்த இனம், ஓரிடத்தில் தோன்றி, பல்வேறு காலங்களில் படிப்படியாக அநாகரிக நிலையிலிருந்து நாகரிக நிலையை அடைந்தது. மனித வரலாறு என்பது இந்தப் படிநிலை வளர்ச்சிதான். கற்காலம், பெருங்கற்காலம், வெண்கலக்காலம், இருப்புக் காலம் என்றெல்லாம் கால வகுப்புகளும் உள்ளன.

இரும்பு கண்டு பிடிக்கப்பட்ட பின்னர் உற்பத்திக் கருவிகளில் முன்னேற்றம் காணப்பட்டது. இருப்பினால் செய்த ஏர் உழவர்களது நெல் உற்பத்திக்கு உதவியது. அதனால் சமூகத்தின் செல்வநிலை உயர்ந்தது. மக்களின் வாழ்க்கை மேம்பட்டது. மனிதனின் அடிப்படைத்தேவைகளான உணவு, உடை உறையுள் ஆகியவற்றின் தரம் வெகுவாக உயர்ந்தது. எண்ணும் எழுத்துமாகிய கலைகள் தோன்றிச் சிறந்தன. கல்வி மேம்பட்டது. இசையும் இசைக்கருவிகளான குழல், யாழ், பறை, முழவு என்பவையும் மேம்பட்டன. கட்டடம், சிற்பம், ஓவியம் நடனம், இசை முதலான கலைகள் செழித்தன. மக்கள் வாழ்வியலில் பெரும் மாற்றங்கள் ஏற்பட்டன. ஆனால் இவ்வளர்ச்சியும் மாற்றங்களும் அவை தோன்றுவதற்குக் காரணமான உடல் உழைப்பாளிகளைச் சென்று அடையவில்லை. உழைக்கும் மக்களின் வாழ்வு உயரவில்லை. மாறாக, சமூக ஏணியின் கீழ்ப் படிகளிலேயே இருந்தது.

வேட்டைச் சமூகமாகவும் மேய்ச்சல் சமூகமாகவும் வாழ்ந்த காலகட்டத்தில் நிலவிய பற்றாக் குறையான நிலையே இவர்கள் வாழ்வில் நீடித்து நிலவியது. புறநானூற்றுப் பாடல் ஒன்று இதனைப் படம்பிடித்துக் காட்டுகிறது.

தீநீர்ப் பெருங்குண்டு சுனைப்பூத்த குவளைக்
கூம்பவிழ் முழுநெறி புரள வரும் அல்குல்......
( புறநானூறு 116)

இனிய நீரையுடைய ஆழ்ந்த சுனைக்கண் பூத்த செங்கழுநீரினது முகை அவிழ்ந்த புறவிதழ் ஒடித்த முழுப் பூவாற் செய்யப்பட்ட தழையசையும் அல்குல் என்று கபிலரும்

அளியதாமே சிறு வெள்ளாம்பல்
இளையமாகத் தழையாயினவே.........
( புறநானூறு 248)

சிறிய வெள்ளிய ஆம்பல்கள் இரங்கத்தக்கன, அவைதாம் யாம் இளையமாய் இருக்க முற்காலத்தே தழையுடையாய் உதவின) என்று ஓக்கூர் மாசாத்தனாரும் கூறியுள்ளனர்.

நீரறவறியா நிலமுதற்கலந்த
கருங்குரனொச்சிக் கண்ணார் குரூஉத்தழை
மெல்லியல் மகளிரைதகலல் குற்
றொடலை யாகவும் கண்டனம்.
(புறநானூறு 271)

நீர் தொலைதலையறியாத நிலத்தில் நிற்கும் கரிய கொத்துக்களையுடைய நொச்சியினது அழகிய நிறத்தையுடைய தழை, இளமகளிருடைய அல்குலிடத்தே தழையுடையாக அணியப்பட்டதனை முன்பு கண்டோம். நொச்சித்தழைகள் பெண்களால் தழையுடையாக அணியப்பட்டதற்கு வெறிபாடிய காமக் காணியார் சான்றளிக்கிறார். இதனையே மோசிகீரனாரும்

மணிதுணர்ந்தன்ன மாக்குரனொச்சி
தொடியுடை மகளிரல் குலுங்கிடத்தி..........
(புறநானூறு 272)

மணிகள் கொத்துக்கொத்தாய் அமைந்தாற் போன்ற கரிய கொத்துக்களையுடைய நொச்சியே, தொடியணிந்த இளமகளிர் அல்குலிடத்தே தழை உடையாகவுங்கிடப்பாய் என்று நொச்சியை நோக்கிக் கூறுவதாகப் பாடியுள்ளார்.

"தலைவி தோழியருடன் 99 வகைப்பட்ட மலர்களைக் காட்டிற் கொய்து வந்து பாறையிலே குவித்து அவற்றின் புறவிதழ்களை நீக்கி, பாம்பின் படம் போலப் பரந்த அல்குலிடத்தே தழையுடையாக அணிந்தாள்" என்று கபிலர் குறிஞ்சிப்பாட்டில் கூறுகிறார். மக்கள் குழுக்களாக வாழ்ந்த காலகட்டத்தில் மானத்தை மறைத்திட அம்மக்கள் தழையும் குளையும் தோலும் உடையாக அணிந்தனர் என்பதனை இவ்விலக்கியங்கள் வாயிலாக நாம் அறிந்து கொள்ளக் கூடியதாய் இருக்கிறது. அதுமட்டுமல்ல சங்க காலப் பெண்கள் தழை குளை போன்றவற்றை ஆடையாக அணிந்தது தமிழரது நாகரிகத்தின் தொன்மையையும் எடுத்துக் காட்டுகிறது.

உழவின் சிறப்பை சங்க இலக்கியங்கள் தொடங்கி இடைக்கால இலக்கியங்கள் வரை சிறப்பித்துக் கூறுகின்றன. திருவள்ளுவர் உழவுக்கு ஒரு தனி அதிகாரமே படைத்துள்ளார். அதில் உழவின் பெருமை உயர்வாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் அதனால்
உழந்தும் உழவே தலை.
(குறள் 1031)

என்று உழவைத் தலையாயது என்றும் முதன்மையானது என்றும் கூறியுள்ளார். உழவுத் தொழிலைப் பின்பற்றியே உலகம் தொழிற்படுகிறது. அதனால் எவ்வளவு துன்பம் வந்தாலும் உழவுத் தொழிலே மேலானது, சிறப்பானது என்கிறார். இரண்டாயிரம் ஆண்டு கழித்தும் சுழன்றும் ஏர்ப்பின்னது உலகம் (Agriculture axis of the world) என்பது பொய்யா மொழியாக இருக்கிறது.

உழுவார் உலகத்தார்க்கு ஆணி அஃது ஆற்றாது
எழுவாரை எல்லாம் பொறுத்து.
(குறள் 1032)

என்றும்,
உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்று எல்லாம்,
தொழுதுண்டு பின் செல்வர்.
(குறள் 1033)

என்றும் கூறியுள்ளார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழவர்கள் தங்கள் மேல் பூந்தாது படிய காஞ்சி மரக்கிளையை வளைப்பதும், ஒற்றை ஏருடைய உழவன் ஈரம் உண்டான நிலத்தில் விதைக்க விரைவதுமாகிய செய்திகள் குறுந்தொகையில் உள்ள மருத நில பண்பாட்டை வர்ணிக்கும் பாடல்களில் உள்ளது.

அதேபோல் மலையும் மலை சார்ந்த இடமுமாக கூறப்படும் குறுஞ்சி நிலத்தில் தினை, பயறு முதலியவற்றை விதைத்து அருவி நீரால் விளைவிப்பார்கள் என்று இலக்கிய சான்றுகள் கூறுகின்றன. பருப்புக்காக மொச்சையையும், உடைக்காக பருத்தியையும் விளைத்து உண்ண, உடுக்கவென்று தன்னிறைவுடன் வாழ்ந்து வந்துள்ள செய்திகள் பண்டைய தமிழர் பண்பாடு நெடுகிலும் காணக்கிடைக்கிறது.

நிலங்களை அதன் வளங்களுக்கு ஏற்ப வன்புலம், மென்புலம், பின்புலம் என்று வகை பிரித்து வைத்திருந்தனர். உப்பு நிலத்தை களர் நிலம் அல்லது உவர் நிலம் என்று தனியாகப் பிரித்து வைத்திருந்தனர்.

நெல், கரும்பு, தானியப் பயிர்கள், மிளகு, தேங்காய், அவரை, பருத்தி, புளி, சந்தனம் என்று அனைத்து வகைகளையும் இவர்கள் உற்பத்தி செய்துள்ளனர். நெல்லிலேயே வெண்ணெல், செந்நெல், புதுநெல் என்று வகை பிரித்திருந்தனர். முல்லை நில மக்கள் பழங்களையும், கால் நடைகளுக்கான தானியங்களையும் உற்பத்தி செய்தனர்.

தொண்டி என்னும் ஊரில் வெண்ணெல் விளைந்ததாகச் சங்கப்பாடல் ஒன்றின் மூலம் தெரியவருகிறது. உள்ளீடில்லாத நெல்லிற்கு பதடி என்றும் பெயரிட்டு வைத்துள்ளனர் பண்டைய உழவர்கள்.

உழவின் சிறப்புப் பற்றி கல்வியில் பெரிய கம்பர் ஏரெழுபது என்ற நூலை எழுதியுள்ளார். இந்த நூல் வேளாண் தொழிலின் சிறப்புப் பற்றிக் கூறுகிறது. உழுகருவி, வேளாண்மையில் எருதுகளில் பயன்பாடு, வேளாண்மைச் செயற்பாடுகள், சோழ மண்ணின் சிறப்பு, வேளாளர்கள் சிறப்பு என்று பல்வேறு வகையானச் செய்திகளை இந்த நூல் கூறுகிறது.

அலகிலா மறைவிளங்கும் அந்தணரா குதிவிளங்கும்
பலகலையாந் தொகைவிளங்கும் பாவலர்தம் பாவிளங்கும்
மலர்குலாந் திருவிளங்கும் மழைவிளங்கும் மனுவிளங்கும்
உலகெலாம் ஒளிவிளங்கும் உழவருழும் உழவாலே.
(உழவின் சிறப்பு - பாடல் 21)

வேள்வி முதல் கல்வி வரை, இயற்கைச் சிறப்பும், அனைத்தும் உழவெனும் உழைப்பின் சிறப்பாலே ஒளிவிளங்குதாகுக என்று உழவின் பெருமையை அனைத்திற்கும் மேலாக வைத்துப் போற்றுகிறார் கம்பர்.

'உலகெலாம் ஒளி விளங்கும் உழவருழும் உழவாலே' என்று சிறப்பெய்திய உழவு என்பது ஒரு தொழில் மட்டுமன்று அது ஒரு பண்பாடு. உழவுடன் தோன்றிய இசை, பாடல் மரபு, உழவுடன் தோன்றிய வழிபாட்டு மரபு, உழவுடன் தோன்றிய விருந்து உபசரிப்பு மரபு என்று உழவைச் சுற்றி ஒரு பண்பாட்டுத் தொகுதி உள்ளது.


இதே பாடல் விவேக சிந்தாமணியிலும் (பாடல் 193) இடம்பெற்றுள்ளதைப் பார்த்தோம். விவேக சிந்தாமணியில் வேறு நூல்களில் இடம்பெற்றுள்ள பாடல்களும் சேர்க்கப்பட்டுள்ளது தெரிகிறது.●

(வளரும்)




பா(f)ன்ஸி பூக்கடை

Fancy Florist

பூஜைக் களஞ்சியம்



**புதிய இடத்தில் புதுப் பொலிவுடன்..!**


இறக்குமதி செய்யப்பட்ட மற்றும் உள்ளூரில் தயாரிக்கப்பட்ட மலர் மாலைகள், மற்றும் அனைத்துப் பூக்களையும் பூஜைப் பொருட்களையும் ஒரே இடத்தில் பெறுலாம்.
சமய சம்பந்தமான சிலைகள், செம்பு விளக்குகள், பூஜை மணிகள் மற்றும் வீடுகளுக்கான பூஜை அறைகள் கிடைக்கும்.

மரணச் சடங்கு மலர் வளையங்கள், பூக்கள் அலங்காரம், பேழைகளுக்கான வாசனைத் திரவியங்கள், கணினியில் அச்சடிக்கப்பட்ட அஞ்சலிச் செய்தி றிபன்கள் கிடைக்கும்.
ஒவ்வொரு வாரமும் தமிழ்நாட்டிலிருந்து இயற்கையான பூக்களை இறக்குமதி செய்கிறோம்.
திருமணங்களுக்கும் ஆலயங்களுக்கும் தேவையான விசேட பூக்களை உடனடியாகத் தருவித்து வழங்குகின்றோம்.
நறுமணம் கமழும் மல்லிகை, றோஸ், சம்பங்கை மருக்கொழுந்து மற்றும் வாடாமல்லிகை மாலைகளில் நாம் கைதேர்ந்தவர்கள்.

**தொடர்புகளுக்கு வரதன்**
**5633 Finch Ave. E., Unit: 6 Scarborough**
**416 288 1419**
**இணையத்தளம்:** www.fancyflorist.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



என். செல்வராசா (நூலகவியலாளர்)

# ஆயுதங்கள் மௌனிக்கப்பட்ட பின் எழுந்த குரல்கள் -2

ஒரு நூலியல் தேடல்

**பெயரிடாத நட்சத்திரங்கள்** என்ற தலைப்பில், ஈழப் பெண் போராளிகளின் கவிதைகளின் தொகுப்பொன்றும் ஜூலை 2011இல் சுவிஸ்ஸிலிருந்து இயங்கும் ஊடறு பதிப்பகத்தினால் வெளியிடப்பட்டுள்ளது. கோயம்புத்தூர் விடியல் பதிப்பகம் இணைந்து வெளியிட்டுள்ள இந்நூல், ஈழவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட பெண் போராளிகளால் அவ்வப்போது எழுதப்பட்டு கவிதைத் தொகுப்புகளில் இடம்பெற்ற கவிதைகளின் தேர்ந்த தொகுப்பாகும். வானதியின் கவிதைகள் (1991), கஸ்தூரியின் ஆக்கங்கள் (1992), நிமிர்வு (1993), வானம் எம் வசம் (1995), வெளிச்சம் கவிதைகள் (1996), செம்மணி (1998), ஆனையிரவு (2000), என் கவிதை (2000), எழுதாத உன் கவிதை (2001), மீண்டும் துளிர்க்கும் வசந்தம் (2004), பெயல் மணக்கும் பொழுது (2007) ஆகிய தொகுப்புகளில் இடம்பெற்றவற்றில் தேர்ந்த 70 கவிதைகள் இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ளன. இவற்றை அம்புலி, அ.காந்தா, அலையிசை, ஜெயா, கலைமகள், ஆதிலட்சுமி, கனிமொழி, ஞானமதி, வானதி, புரட்சிகரா, கஸ்தூரி, கிருபா, மலைமகள், நகுலா, நாமகள், நாதினி, பிரேமினி, பிரமிளா, ரூபி மார்கரட், பாரதி, சிரஞ்சீவி, சூரியநிலா, சுதாமதி, தமிழவள், தயாமதி, தூயவள் ஆகிய 26 போராளிக் கவிஞர்கள் எழுதியிருக்கிறார்கள். ஈழத்தமிழ்ப் போராளிகளின் ஆயதங்கள் மௌனிக்கப்பட்டு, விடுதலைப் போராட்டம் புதியதொரு அத்தியாயத்தை எட்டியிருக்கும் இவ்வேளையில், போராட்டத்தை நடத்திச்சென்ற பெண்போராளிகளின் உணர்வுகளை மீள்தரிசனம்செய்வதாக இந்நூல் அமைந்துள்ளது.

ஈழத்தமிழரின் உணர்வுகளையும் வரலாற்றையும் பதிவாக்கும் மற்றொரு ஆக்க இலக்கிய வடிவமாக நாவல்கள் அமைந்திருக்கின்றன. அதன் தொடர்ச்சியாக **சாம்பல் பறவைகள்** என்ற தலைப்பிலான குறுநாவல் எஸ்.அரசரெத்தினம் அவர்களால் எழுதப்பட்டு கல்முனை: சத்தியா பப்ளிக்கேஷன்ஸ் வெளியீடாக ஓகஸ்ட் 2010இல் வெளிவந்துள்ளது. இக்குறுநாவல் வன்னிச் சமரின்போது சாதாரண மக்கள் அனுபவித்த அவலங்களை வெளிக்கொண்டுவரும் நோக்கில் எழுதப்பெற்றுள்ளது. ஆனந்தன்-பவானி காதல் பற்றிய கதையாகத் தொடங்கினாலும், கதை முழுவதும் யுத்தத்தின் கொடுமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளது. மணியத்தாரின் கண்டிப்பான வளர்ப்பில் வளர்ந்த ஆனந்தன் மாஸ்டர் உருத்திரபுரம் முருகேசுவின் மகளான பவானி ஆசிரியையிடம் காதல் கொள்கிறார். ஆனந்தனின் தந்தை எதிர்த்துக் கிளம்ப ஆனந்தன் பொறுமையைக் கையாள்கிறான். விரக்தியுற்ற பவானி கிளிநொச்சி மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்றுச் செல்கிறாள். போரின் கெடுபிடி சூடுபிடிக்கிறது. பெட்டி படுக்கையுடன் மக்கள் இடம்பெயர, பவானி, தந்தை முருகேசு, அண்ணன் குமாரின் குடும்பம் என்போர் புளியம்பொக்கணைக்கு இடம்பெயர்கிறார்கள். வழியில் முருகேசர் நெஞ்சுவலியால் இறக்கிறார். இருட்டுமடு கிராமம், சுதந்திரபுரம், இரணைப்பாலை, புதுமாத்தளன் என்று எஞ்சியோரின் இடப்பெயர்வு தொடர்கிறது. குமாரின் மனைவி சாரதா பங்கருக்குள்ளேயே ஆண்குழந்தையைப் பெற்றுவிட்டு உயிர்துறக்கிறாள். பால் வாங்கவும் வழியின்றி குமார், பவானி, உமா ஆகியோர் இராணுவத்திடம் சரணடைகின்றனர். இடையில் குழந்தையும் இறக்கின்றது. இராணுவத்தின் உதவியுடன் வவுனியா முகாமுக்கு வந்துசேர்கின்றனர். முகாமில் ஆனந்தன் பவானியை சந்திக்க முயல்கிறான் என்றவாறாகக் கதை தொடர்கின்றது. இலங்கையில் கருக்கொண்டு ஈழத்துப் பதிப்பகத்திலேயே வெளியிடப்பட்ட நாவல் என்பதால் இந்நாவலில் சில சுயதணிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருப்பது தவிர்க்கமுடியாததாயுள்ளது. இந்நிலையும் ஒரு சொல்லப்படாத கதையின் பதிவுதானே.

இந்நிலையில் தமிழகத்தின் மலையாள எழுத்தாளர் எஸ்.மகாதேவன் எழுதிய **மேலும் சில இரத்தக் குறிப்புகள்** என்ற நாவல் பற்றி ஈழத்துப் படைப்பாளிகளுக்குச் சொல்லவேண்டியுள்ளது. மலையாள மூலத்திலிருந்து குளச்சல் மு. யூசுஃப் அவர்களால் தமிழுக்கு மொழிமாற்றம் செய்து தமிழகத்தில் பொள்ளாச்சியிலிருந்து எதிர் வெளியீடு ஜூலை 2009 இல் அவசர அவசரமாக இந்நூலை வெளியிட்டிருந்தது. இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கெதிரான யுத்தம் முள்ளிவாய்க்காலில் முடிவுக்கு வந்த காலப்பகுதியில் இந்நூல் வெளியிடப்பட்டதென்பதை முதலில் மனங்கொள்வது அவசியம். இலங்கையில் நடைபெறும் யுத்தத்தில் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் வன்னியிலிருந்து இந்தியாவுக்கு அகதிகளாகக் கடல்மார்க்கமாக வந்தவண்ணமுள்ளனர். அப்படி வருபவர்களில் கணிசமானோர் இந்தியக்கரையை அடைவதில்லை என்ற அனுமானத்தில், அவர்களுக்கு என்ன நடந்திருக்கும் என்ற தேடலாக உருவகித்த கற்பனையில் உதித்த கதை இது. ஈழ விடுதலைப் போராட்டம் பற்றிய ஆழமான பார்வையற்ற, ஈழத்தவர்களுக்கு எரிச்சலூட்டும் கற்பனாவாதக் கதையாக இது அமைகின்றது. எமது வரலாற்றை நாம் எழுதத் தயங்கும்போது, மற்றவர்கள் சுதந்திரமாக அதைத் தமது கைகளில் எடுத்துக்கொண்டு எமது வரலாற்றை கற்பனாவாதக் கதைகளாக மாற்றி எமது உணர்வுகளையும், சிந்தனைகளையும் கொச்சைப்படுத்த வாய்ப்பளிக்கக்கூடாது என்ற உணர்வே இக்கதையை வாசித்துமுடித்ததும் எனக்கு முதலில் ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் அவலத்தின் பின்னணியில் சில கட்டுரை நூல்களும் புகலிடத்திலிருந்து வெளிவந்துள்ளன. **புதுமாத்தளன் சோகங்களுக்கு புதுமருந்து** என்ற நூல் டென்மார்க்கில் வாழும் படைப்பாளியான கி.செ.துரை (இயற்பெயர்: கிருஷ்ணன் செல்லத்துரை) அவர்களால் எழுதப்பட்டு, டென்மார்க், அலைகள் மூவீஸ் இன்டர்நெஷனல் வெளியீடாக ஜூன் 2010இல் வெளியிடப்பட்டிருந்தது. எஸ் பொவின் சென்னை, மித்ர ஆர்ட்ஸ் அன்ட் க்ரியேஷன்ஸ் நிறுவனம் இந்நூலை தமிழகத்தில் அச்சிட்டு விநியோகித்திருந்தது. அலைகள் இணையப் பத்திரிகையில் 18 நாட்கள் தொடர்ச்சியாக எழுதப்பட்ட கட்டுரைத் தொடரின் நூல் வடிவம் இது. விடுதலைப்புலிகளின் ஆயுதப் போராட்டம் ஏழு ஆதரவு நாடுகளின் கூட்டு இராணுவ உதவியுடன் இலங்கை இராணுவத்தால் முறியடிக்கப்பட்ட வன்னிப்பிரதேசமான புதுமாத்தளனை ஈழத்துத் தமிழ் மக்களின் முப்பது ஆண்டு ஆயுதப் போராட்டத்தின் தோல்வியின் குறியீடாகக் காண்கின்றார் கி.செ.துரை. அந்த இழப்பின் உணர்வுபூர்வமான சோகங்களிலிருந்தும், விரக்தியிலிருந்தும் விடுபட்டு, மீண்டும் விழித்தெழுந்து விடுதலைக்காக புதிய வழிகளில் உழைப்போம் என்று நம்பிக்கையூட்டி உற்சாகப்படுத்தும் வகையில் இதிலுள்ள மனித மேம்பாட்டுக் கட்டுரைகளை அவர் எழுதியுள்ளார். போராட்டத்தின் தோல்வியை ஜீரணிக்கமுடியாது, வன்னியில் உறவுகளின் இழப்பைத் தாங்கிக்கொள்ள முடியாது, தமது துயரச்சுமையை எங்கே இறக்கிவைப்பதென்றறியாது புகலிட தேசங்களில் உறவுகளின் மடிதேடிக் கலங்கித் திரிந்த பலநூறு மக்களுக்கு ஆறுதல் சொல்வதாக இக்கட்டுரைகள் இலக்கிய நயத்துடன் அமைந்திருந்தன.

(அடுத்த இதழிலும் வரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்

* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், 'இம்பிளான்ற்'
சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட
அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

2466 Eglinton Avenue East, Unit:7
Scarborough, Ontario. MIK 5J8
Monday to Saturday
Near Kennedy Subway (Rainbow VillageBuilding)

**(416) 266 5161**

**Main Square Dental Office**

7-2575 Danforth Avenue
Toronto, Ontario. M4C 1L5

Dr. Shan - Thursday (morning)
Dr. Yao San (Tue, Fri & Sat
Dr. Brian (monday)
Dr. May (wednesday)

**(416) 690 0121**

# Computek College

BUSINESS - HEALTH CARE - TECHNOLOGY

Est. 1991

www.computek.edu

We provide assistance for Second Career funded Applicants. E.I receiving /received, Maternity benefits received, WSIB, Ontario Works clients & New Immigrants welcome



**SECOND CAREER**

**You maybe eligible upto $28,000 to pay for:**

Living Expenses
Transportation
ChildCare
Books
Tuition and other

**Diploma Programs**

- Early Childcare Asst (ECA)
- Personal Support Worker (PSW)
- Medical Office Admin (MOA)
- Computerized Accounting
- Business Administration
- Application Development
- Network Engineering
- Enterprise Network Engineering

| Markham Campus | Scarborough Campus | Toronto Campus |
|---|---|---|
| Markham / Steeles | Kennedy / Sheppard | Kennedy / Eglinton |
| 905.471.3344 | 416.321.9911 | 416.285.9941 |


Not all the courses are available at all the locations



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உறவுகள் பிரியும்போது மலைகளையே சுமக்கவேண்டிவருகிறது

# உங்கள் உறவுகளின் இறுதியாத்திரையை முறையாகவும், இலகுவாகவும் அமைத்திட நாங்கள் உதவுகிறோம்





- மரண அறிவித்தல்கள்
  வீட்டிலிருந்த படியே விரும்பிய ஊடகங்கள் ஊடாக அறிவித்தல்களை வெளியிடவும்
- சமய சம்பந்தமான கிரியைகள் செய்பவர்களின் விபரங்களைப் பெற்றுக்கொள்ளவும்
- பூ அலங்காரங்கள், மாலைகள், பூப்பந்தல்களின் தெரிவுக்கும்
- விரும்பிய, பொருத்தமான Casket (மரணப்பேழை)களை பெற்றுக்கொள்ளவும்
- இணையத்தளத்தினூடாக நேரடி ஒளிபரப்புச் சேவையை பெற்றுக்கொள்ளவும்
- Slideshow உருவாக்கம் செய்யவும்
- உங்கள் கலாசார, பண்பாட்டு முறைப்படியே இறுதிச்சடங்குகளை ஒழுங்குசெய்வதற்கான ஆலோசனைகளை பெற்றுக்கொள்ளவும்
- உலகின் எப்பாகத்திலிருந்தும், எப்பாகத்திலும் Wreath (மலர்வளையம்) வைப்பதற்கான சேவையை பெற்றுக்கொள்ளவும்

MARANAM.COM

**HEAVEN CARES**

ADVISING FAMILIES ON YOUR LOVED ONE'S FINAL JOURNEY

www.maranam.com, E-Mail: info@maranam.com

Working With

Chapel Ridge

FUNERAL HOME INC.

PROVIDING PEACEFUL FINAL ARRANGEMENTS

8911 Woodbine Ave., Markham, ON L3R 5G1



Call: **Vilosan Sivatharman** B.Eng

Funeral Counsellor

**416-431-3600** Ext:1

Call: **Christeen Seevaratnam**

Funeral Counsellor

**416-431-3600** Ext:2




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..

On high, with your thoughts

PRO MAR Ltd.



- Corporate Awards
- Promotional Products
- Laser Engraving
- Pad Printing
- Silk Screening


*Vivek Subra*
Director
B:416- 291 2344
D:416- 898 4846
promarawards@gmail.com

www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5




வாங்குவதும் விற்பதும் சுலபமே ஆனால்..
தெளிவான தெரிவே உங்கள் வெற்றிப்படி.

**Why think so long...?**



- Free market evaluation
- Professional advice on selling your home for more
- State of the art marketing idea
- Flexible commission
- Friendly service producing excellent results
- List through me to have your property sold in a few days

Mortgages & loans arrangements


Vivek Subramaniam
Sales Representative
416- 898 4846

**Homelife/Future**
Realty inc. Brokerage
7 Eastvale Drive, Unit 205, Markham, On. L3S 4N8
Bus: 905 201 9977, Fax: 905 201 9229
Independently Owned and Operated

# NKS Draperies & Blinds

210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON
**416 321 6420**





- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters

உங்கள்
இல்லங்களை
மாளிகையாக்கிட

அழையுங்கள்
கேதா

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். கணேஷ்

# கனடாவின் வெண்கலப் பதக்கம் அடுத்த சந்ததியின் வெற்றி

கனடாவின் உதைபந்தாட்ட சரித்திரத்தில் ஆண்களின் அணியிலும் பார்க்க பெண்களின் அணி திறமையும் உலக தரமும் வாய்ந்தது என்றால் மிகையாகாது. கனடாவின் ஆண்கள் தேசிய அணி உலக தரத்தில் 79வது இடத்தில் உள்ளது. ஆனால் பெண்கள் அணி 7வது இடத்தில் உள்ளது என்றால் கனடாவில் பெண்களின் உலக தரத்தை யாவரும் அறிந்து கொள்ளலாம்.

இம்முறை நடைபெற்ற ஒலிம்பிக் போட்டிகளில் (2012) மீண்டும் ஒருமுறை கனடிய பெண்கள் அணி கனடிய மக்களைத் தலைநிமிர வைத்துள்ளது. 1936ம் ஆண்டிற்குப் பின்னர் உதைபந்தாட்டத்தில் கனடா பெற்ற முதல் பதக்கம் இந்த ஒலிம்பிக்ஸ் போட்டிகளில், அதுவும் பெண்களால்தான் சாத்தியப்பட்டுள்ளது. கனடிய ஆண்கள் அணி 2000ம் ஆண்டு தங்கக் கிண்ணத்தைக் கைப்பற்றியது. 1986ம் ஆண்டு உலக கிண்ணத்தில் விளையாடியது. ஆனால் உலக தரத்தில் எந்தவித சாதனையும் சாதிக்கவில்லை. கனடிய அணியின் பெண்கள் தற்போது பெற்ற வெற்றி (வெண்கல பதக்கம்) 2015ம் ஆண்டு கனடாவில் FIFA உலக கிண்ணப் போட்டிகளுக்கு கட்டியம் கூறுவதாக உள்ளது.

தற்போது பல கனடிய தமிழ்ப் பெண்கள் தரம் வாய்ந்த கழகங்களில் விளையாடுவதை காணக்கூடியதாகவுள்ளது. 19 வயதுக்குட்பட்டோர் பெண்கள் பிரிவில் கனடிய தேசிய அணியில் தற்போது தமிழ்ப் பெண் உதைபந்தாட்ட வீராங்கனை இடம்பெற்றுள்ளார். அதைவிட பல மாகாண அணிகளில் பல தமிழ்ப் பெண்கள் இடம்பெறுகிறார்கள். கனடாவின் இந்த வெற்றி 2015ம் ஆண்டு கனடாவில் நடைபெறும் உலக கிண்ணப் போட்டிகளில் கனடாவின் வெற்றிகளை பறைசாற்றுவதற்கு உந்துசக்தியாக அமையும் என்பது திண்ணம்.

FIFA உலக தரத்தில் 152 இடத்தில் அமெரிக்க பெண்கள் அணியை அரையிறுதி ஆட்டத்தில் 90 நிமிடங்கள் + Over time 30 நிமிடங்களில் திக்குமுக்காட வைத்து இறுதி நேரத்தில் நடுவர் விட்ட பல பிழைகளின் மத்தியிலும் கனடிய அணி உலக தரத்தில் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் இம்முறை நிச்சயமாக தங்கப் பதக்கத்தை பெறவேண்டிய அணி என உலகத்திற்கு நிரூபித்துள்ளது.



ஒலிம்பிக்ஸ் 2012 உதைபந்தாட்ட அரை இறுதியாட்டம் கனடா அணி தோல்வியுற்றாலும் நடுவர் விட்ட பிழையினால் தோல்வியுற்றதே ஒழிய அதாவது 87வது நிமிடத்தில், நோர்வே நடுவர் பெண்மணி, கனடிய உதைபந்தாட்ட வீராங்கனையின், தன்னை பாதுகாத்துக் கொண்டதற்காக Penalty Area வில் தன் கைகளை திருப்பியதற்காக Penalty kick ஐ அமெரிக்க அணிக்கு சாதகமாக அறிவித்து (Not deliberately hand ball) penalty யை வழங்கி அமெரிக்க அணியை 3:2 என்ற முன்னணியில் இருந்த கனடிய அணியை சமன் செய்து வைத்தார்.

அதைத் தொடர்ந்து Over Time இலும் கனடிய அணி போராடியது. ஆனாலும் நடுவர் விட்ட தொடர் தவறுகளினால் இறுதி நிமிடத்தில் கனடிய அணி தோல்வியுற்றது. ஆனாலும் உலகம் முழுவதும் தொலைகாட்சிகளும் சரி, பொதுசன ஊடகங்களும் சரி, கனடாவின் தோல்வியை நியாயப்படுத்த முடியாது என எடுத்தியம்பின. இந்த உண்மையே 2015ம் ஆண்டு FIFA உலக கிண்ணப் போட்டிகளில் கனடாவின் அடுத்தபடி முன்னேற்றத்தை பறைசாற்றி நிற்கின்றன'●

Get more from your home by paying less each month

Ragavan (Raga) Ramanathan AMP
Mortgage Development Manager
Platinum Performer

Scotiabank® You're richer than you think.®

Tel: 416.579.7533
Fax: 416.352.1464
Email: ragavan.ramanathan@scotiabank.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரொறன்ரோவில் 'கொன்டோ' அதிகரிப்புக் காரணத்தால் அவசர சிகிச்சைப் பிரிவுகள் சந்திக்கும் நெருக்கடி

ரொறன்ரோ நகரில் 'கொன்டோ' உயர்மாடி மனைகள் அதிகரித்து வருவதால், இங்குள்ள வைத்தியசாலைகளின் அவசர சிகிச்சைப் பிரிவுகள் பலத்த நெருக்கடியைச் சந்தித்து வருவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. "ஒரு தடவை எவராவது இந்தப் பக்கம் வந்து எட்டிப் பார்த்தால் நிலைமையைப் புரியலாம்" என்று அவசர சிகிச்சைப் பிரிவின் தலைமை அதிகாரியான டாக்டர் அனில் சொப்ரா தெவித்துள்ளார். வடஅமெரிக்காவிலேயே கூடியளவு கொன்டோக்கள் ரொறன்ரோவிலேயே உள்ளன. இதற்கு ஏற்றதாக அவசர சிகிச்சைப் பிரிவுகள் விஸ்தரிக்கப்படவில்லை.

ரொறன்ரோவின் இரண்டு வைத்தியசாலைகளில் மட்டும் ஒவ்வொரு வருடமும் ஒரு லட்சம் பேர் அனுமதிக்கப்படுகின்றனர். வருடாந்த நோயாளர் தொகை சுமார் பத்து வீதமாக அதிகரித்து வருகின்றது. 2006க்கும் 2011ஆம் ஆண்டுக்குமிடையிலான காலத்தில் ரொறன்ரோவின் சனத்தொகை 4.5 வீதத்தால் (112,000 ஆட்கள் வரை) அதிகரித்துள்ளது. சென் மைக்கல் வைத்தியசாலையின் அவசர சிகிச்சைப் பிரிவே அதிக நெருக்கடியைச் சந்திக்கின்றது.

## விபத்து வாகனங்களைப் படமெடுத்த சாரதிகளுக்கு தலா 115 டாலர் அபராதம்

401 இலக்க நெடுஞ்சாலையில் கடந்த மாதம் 20ஆம் திகதி இடம்பெற்ற வாகன விபத்தொன்றினைத் தொடர்ந்து 22 சாரதிகளுக்கு தலா 155 டாலர்கள் அபராதம் விதிக்கப்பட்டது. அபராதம் விதிக்கப்பட்டவர்கள் விபத்துடன் சம்பந்தப்பட்ட வாகனங்களின் சாரதிகள் அல்ல. விபத்து நடைபெற்ற நெடுஞ்சாலையில் தங்கள் வாகனங்களை ஓட்டிச் சென்றவர்களே அபராதம் செலுத்த நேர்ந்தது.

இவர்கள் செய்த குற்றமென்னவெனில், தங்கள் வாகனங்களைச் செலுத்தியவாறு அங்கு இடம்பெற்ற வாகன விபத்துக் காட்சியைத் தங்களது செல்லிடத் தொலைபேசியில் படமெடுத்ததுதான். வாகனம் செலுத்தும்போது செல்லிடத் தொலைபேசி போன்ற சாதனங்களைப் பாவிப்பது இங்கு தண்டனைக்குரிய குற்றம். விபத்து நடந்த இடத்தில் பொலிஸார் நிற்பதைக் கவனியாது இவர்கள் செய்த குற்றம், தண்டம் செலுத்தும் நிலைக்குத் தள்ளிவிட்டது.

கிங்ஸ்ரனுக்கு அண்மையிலுள்ள நப்பனி என்ற இடத்தில் இரண்டு பார ஊர்திகள் விபத்துக்குள்ளான இடத்தில் இச்சம்பவம் நடைபெற்றது. மற்றொரு சாரதி தமது முழங்கையினால் வாகனத்தைச் செலுத்தும்போது பிடிபட்டதால் அபராதம் விதிக்கப்பட்டார்.

## தமிழர் தகவல் இதழ்களைத் தபாலிலும் பெறலாம்

தமிழர் தகவல் மாத இதழ்களையும் பெப்ரவரி மாதத்தில் வெளிவரும் ஆண்டு மலரையும் தபாலில் பெற வசதிகள் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பெற விரும்புபவர்கள் கீழுள்ள தொலைபேசி இலக்கத்தில் தங்கள் தொலைபேசி இலக்கத்தையும் பெயரையும் பதிவு செய்தால் தாமதமின்றித் தொடர்பு கொள்ளப்படும்.
அல்லது tamilsinfo@sympatico.ca
என்ற மின்னஞ்சலுக்கு விபரங்களை அனுப்பலாம்.

**416.920.9250**

HERITAGE
Education Funds

**RESP**
**SAVINGS PLAN**
**கல்விச் சேமிப்புத் திட்டம்**

Your are eligible to apply for and Education Savings Grant of up to $7,200 per child

Your savings are more safe and secure

Your can start with a small amount

it's a more flexible plan

**EDUCATION IS A GREAT GIFT FOR YOUR FUTURE GENERATIONS**

உங்கள் பிள்ளைகளின் கல்விக்கான சேமிப்பு உங்கள் எதிர்கால தலைமுறைக்கான முதலீடு

WWW.KERUDAVIL.COM

**INCOME TAX PREPARATION**

**Personal Income Tax**
**Small Business Income Tax**
**Computerized Returns**

Graphic Land - 647. 219. 7576



S.Ganthiy
B.A. Srilanka
Enrollment Officer

**416. 841. 1866**
**416. 955. 9303**
E.mail: ganthiy@rogers.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



எஸ். காந்தி

# வெள்ளிப் பணம்

68

வெள்ளிப்பணத் தொடரில் இம்முறை கனடாவின் எண்ணெய் வளமும் அதன் பயன்பாடும் உலக ரீதியில் அதனை ஒப்பிட்டு நோக்குவதாகவும் அமைகின்றது.

உலகநாடுகளின் பொருளாதாரத்தில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தும் காரணியாக இருப்பது Crude Oil எனப்படும் மசகு எண்ணைவிலை உலகசந்தையில் உயர்ந்து செல்வதுதான். உலக சந்தையில் 2008ம் ஆண்டு ஜுலை மாதமளவில் ஒரு பீப்பாய் எண்ணெய் விலை 145 அமெரிக்க டாலர்வரை சென்றுள்ளது இக்கட்டுரை எழுதுகையில் இது 92.87 அமெரிக்க டாலராக இருக்கின்றது. இது இன்னும் இரண்டுவருடத்தில் 200 டாலர்கள்வரை செல்லலாம் என்பது சில பொருளியல் நோக்கர்களின் கணிப்பீடாக கணக்கிடப்படுகின்றது.

பூமிப்பந்தின் கிழ் இருக்கும் இந்தவளம் எதிர்காலத்தில் இல்லாமல் போகலாம். இதன்பின்னர் இதற்கான பிரதீயீடாக புதிய சக்திவளத்தை கண்டுபிடிப்பது அவசியம் என்பது ஒருசாரார் கருத்தாகும். இயற்கையை நேசிக்கும் சுற்றுச்சூழல் ஆவலர்கள் தற்போதைய மசகு எண்ணெய் உற்பத்தியும் அதன்பயன்பாடும் உலகம் எங்கும் ஏற்பட்டிருக்கும் கால நிலை மாற்றத்துக்கும், இயற்கை அனர்த்தங்களுக்கும் காரணம் எனக் கூறி எச்சரிக்கப்படும்போதும், இதன்பாவனையும் உற்பத்தியும் தொடர்ச்சியாக அதிகரித்து செல்கின்ற போக்கினை காண்கின்றோம்.

பொதுவாக இந்த எண்ணெய் வளங்கள் இருக்கும் நாடுகளின் அடிப்படையில் கனடா மூன்றாம் இடத்தில் இருக்கின்றது. முதலாவதாக வெனிசுவெலா நாடும் இரண்டாவது இடத்தில் சவுதி அரேபியாவும் இருப்பதாக சொல்லப்பட்டாலும் அதனை உற்பக்திசெய்யும் நாடுகள் வரிசையில் கனடா 6 வது இடத்தில் இருக்கின்றது. ஏறத்தாழ ஒருநாளைக்கு 3,289,000 பீப்பாய்கள் (barrels) மசகுஎண்ணையை உற்கத்தி செய்கின்றது. இருப்பினும் ஏற்றுமதி செய்யும் நாடுகளின் வரிசையில் 11ம் இடத்தில் கனடா இருக்கின்றது.

கனடாவின் நுகர்வுக் ஒருநாளைக்கு 220 000 பீப்பாய்களுக்கு மேல் தேவைப்படுவதாக புள்ளிவிபரங்கள் கூறிகின்றன. சக்திவளத்தை பொறுத்தவரையில் கனடா தன்சொந்த வளத்தை பாவிப்பது கனடிய பொருளாரத்திற்கு அடிப்படை ஆதாரமாக அமைகின்றது. மசகு எண்ணெயின் விலை உலகசந்தையில் அதிகரிக்கும் போது கனடிய நாணயத்தின் பெறுமதியும் அதிகரித்து செல்லும் போக்கினையும் நாம் அவதானிக்கமுடியும்.

எண்ணெய் வளம் கனடாவில் இருந்தாலும் ஏன் பெற்றோலின் விலை (Gas Price) குறைவதில்லை என்பதில் எமக்கு கேள்வியாக எழுகின்றது. இதற்கான காரணம் அதற்கான உற்பத்தி செலவும், அதனை இடத்துக்கிடம் கொண்டுசெல்லும் செலவும், அரசாங்கத்தின் பல்வேறுநிலைகளில் விதிக்கப்படும் வரியும். இதற்கு மேலாக நிறுவனங்களின் இலாப நோக்கமும் காரணமாக இருக்கின்றது. கனடாவின் மசகு எண்ணெயை (Crude Oil) இறக்குமதி செய்யும் நாடாக அமெரிக்கா இருக்கின்றது. தற்பொழுது குழாய் (Pipe Line) மூலமாக அல்பேட்டா மாகானத்தில் இருந்து நேரடியாக அமெரிக்காவுக்கு எண்ணெயை அனுப்பும் கனடாவின் திட்டத்துக்கு அமெரிக்காவின் ஆதரவு கிடைக்காத நிலையிம் கனடா ஆசிய நாடுகளுக்கும் தமது வர்த்தகத்தினை விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுப்பட்டிருக்கின்றது.

இத்தகைய சூழல் இருப்பினும் கனடா தனது எண்ணெய் உற்பத்தியினை கூட்டுவதும் குழாய் மூலமாக ஒரு இடத்தில் இருந்து இன்னொரு இடத்துக்கு எடுத்துச் செல்வதினையும் சூற்றுச் சூழலில் அக்கறையுள்ள பல அமைப்புகள் எதிர்த்து வருவதினையும் செய்திகள் மூலம் நாம் அறியக் கூடியதாய் உள்ளது.

எப்படியாயினும் ஒருநாட்டின் பொருளாதார வளர்ச்சி, அதன் தளம்பல் அற்ற போக்கு, மக்களின் உயர்ந்த வாழ்க்கைத் தரம் போன்ற காரணங்களுக்கு அந்த நாட்டின் இயற்கை வளமும் ஒரு காரணம் என்பதை அனுமானிக்க முடியும்.●


R & S AUTO SALES

Top Quality Used Car Dealer


வங்கியால் உடமைப்படுத்தப்பட்ட வாகனங்களை விற்பது எமது விசேட திறன்

35 வருட அனுபவம்



HONDA
TOYOTA
GM-MINI VANS

We Sell Bank Repossed Cars
Accident Vehicle Repair
Computerized Painting
Motor Vehicle Accident
Traffic Tickets



தமது சிறப்பான சேவையால் அதி உயர் விருது பெற்ற

Radha

R & S Auto Sales Inc.
Radha Motor Inc.

3030 Markham Road
Scarborough, ON

416-412-3838
416-836-5825


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு குடையின் கீழ்
சகல தேவைகளும்

எஸ்.பி. இம்போட்டர்ஸ்

## S.P. Importers



**Fresh Fish & Meat**
2853 Lawrence Ave. East
Scarborough
**416 261 4737**

**Furniture & Mattress**
2859-2861 Lawrence Av. E.
Scarborough
**416 266 3077**

**Grocery & Vegetables**
2863 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

**Video & Audio**
2865 Lawrence Ave. East
Scarborough
**416 261 3881**

**TAMILSYELLOWPAGES.COM**

பிறந்த நாள் முதல்
இறந்த நாள் வரை
உங்கள்
அனைத்துச்
சேவைகளையும்
பூர்த்தி
செய்வதற்கும்

உங்கள்
அன்றாட
வாழ்க்கைக்குத்
தேவையான
தொப்பி முதல்
பாதஅணிவரை
அனைத்துத்
தரமான
பொருட்களை
குறைந்த
விலையிலும்,
துரிதமாகவும்
பெற்றுக்கொள்ள
நீங்கள்
நாடவேண்டிய
வர்த்தக
**WEB SITE**

**Mobile: 416-752-4444**
**Tel: 416-644-7273**
E-mail: tamilyp@gmail.com

## The Children's Education Trust of Canada

offered to the public by

**Children's Education Funds Inc.**



10 டாலரிலிருந்து ஆரம்பித்து
7200 டாலர்கள் வரை
கனடா அரசாங்கம் வழங்கும்
நன்கொடையைப் பெற்று
(20 வீத Grant)
உங்கள் பிள்ளைகளதும்
பேரப்பிள்ளைகளதும்
கல்வி வாய்ப்பை
ஊக்குவியுங்கள்.

சமூக நம்பிக்கையையும்
நன்மதிப்பையும் பெற்ற
சிவா
கணபதிப்பிள்ளை
அவர்களை அழைத்து
விபரங்களைப் பெறுக!

Siva Kanapathypillai
Branch Manager

416 438 0660, 416 438 3578
416 899 6044
இல்லத் தொலைபேசி:
905 472 1139
email
s.kanapathypillai@cefi.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Proposed changes to skilled worker program announced

Proposed regulatory changes in the federal skilled worker program were announced on Aug. 17. As anticipated the selection criteria in the skilled category include emphasis on higher language proficiency, Canadian work experience and younger applicants, while reducing points for foreign work experience.

"The changes we are making to update the selection criteria are based on a large body of data and evidence we've accumulated over the years showing what skills and qualifications are most likely to lead to success for skilled immigrants," said Citizenship and Immigration and Minister Jason Kenney, making the announcement.

The proposed changes are:

§ Making language the most important selection factor by establishing new minimum official language thresholds and increasing points for language;

§ Increasing the emphasis on younger immigrants, who are more likely to acquire valuable Canadian experience and remain in the workforce longer;

§ Increasing points for Canadian work experience and reducing points for foreign work experience;

§ Simplifying the arranged employment process; and

§ Awarding points for spousal language ability and Canadian experience.

Another proposed change is the mandatory requirement to have foreign education assessed against Canadian education standards by designated organizations, prior to applying. However, it does not necessarily guarantee that the prospective immigrant would become licensed to practice in a regulated occupation, according to a government press release.

"This is an important step we are taking to address the problem of immigrants arriving and not being able to work in their field," added Minister Kenney. "This new requirement will help potential newcomers make informed choices about immigration and Canadian career paths."

These changes are expected to come into effect in January 2013.

madd Campaign 911

மதுசாரம் அல்லது போதைப் பொருட்களால் போதையேறியிருந்தால் வாகனம் ஓட்டாதீர்கள்.

அதற்கென தனியான ஒரு சாரதியை ஒழுங்கு செய்துகொள்ளுங்கள்.

வாடகை கார் (taxi) ஒன்றை அழையுங்கள்.

இரவு தங்கிவிடுங்கள்.

சாரதியொருவர் குடிபோதையில் வாகனம் ஓட்டுவதாக நீங்கள் சந்தேகித்தால்
உடனடியாக 911ஐ அழையுங்கள்.

madd Toronto

தொலைபேசி: 416-924-2666
மின் அஞ்சல் முகவரி: info@madd.ca
இணையம்: maddtoronto.ca

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# AB LEGAL SERVICES
## Professional Corporation

**Kauvsegan.E**
Accident Benefit Specialist

204-80 Corporate Drive, Toronto, ON. M1H 3G5
**Tel: 416 290 6200    Fax: 416 290 6201**
email: info@ablegalspc.com
www.ablegalspc.com



ஓம்

# ஸ்ரீகௌரி மங்கள சேவை



அனைத்து இந்து மத கிரியைகளுக்கும்
கனடிய திருமண பதிவு அதிகாரி, இந்து மதகுரு

**சிவஸ்ரீ பஞ்சாட்சர விஜயகுமார குருக்கள்**

(ஐயாமணி) புங்குடுதீவு-10
ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய பிரதம குரு

திருமணம், திருமணப் பதிவு
புதுமனை புகுதல்
கடை திறப்பு வைபவம்
புண்யாக வாசனம்
பூப்புனித நீராட்டு விழா
பூமாலை, ஆண்டாள் மாலை
சடை நாகம்
தலை நகை முழுவதும்
முத்து மணவறை

தலைப்பாகை
பந்தல் அலங்காரம்
கல்யாண பூசைப் பொருட்கள்
முத்துச் சப்பரம்
ஆலயத் திருவிழா
ஆலய வைபவங்கள்
ஆகிய அனைத்துக்கும்
எப்போதும் எம்முடன்
தொடர்பு கொள்ளுங்கள்

**416-266-3333**

628 E Birchmount Road
Scarborough, Ontario. M1K 1P9

ஸ்காபரோ ஸ்ரீவரசித்தி விநாயகர் ஆலய தொலைபேசி இலக்கம் 416-291-8500




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

CGA

*THE NAME YOU NEED FOR YOUR BUSINESS*



Phone: 416-494-4777
Cell: 416-888-1128
Fax: 416-494-4050
E-mail: nimal@nlraccounting.com

**NIMAL VINAYAGAMOORTHY**

Certified General Accountant

2525 Pharmacy Ave. (Pharmacy & Finch), Toronto, Ontario M1W 2K2

**நான் ஒரு வழக்கறிஞர் இல்லை**

***Motor Vehicle Accident***

***Criminal***

*வாகன விபத்து!*

*கிறிமினல்!*

**உங்கள் கணிப்பு தவறாகலாம்.. உரிய**





**ஆலோசனைகளுக்கு**

**கலகலப்பு தீசன்**

**416-803-5296**

WWW.KALAKALAPPU.NET

SABESAN'S *Choice*



**தனி மரத்தினாலான நிலம், நிலவிரிப்பு**
**சுவருடன் இணைந்த அலுமாரிக் கதவுகள்**
**யன்னல், கதவு புதுப்பித்தல்**
ஆகிய வேலைகளில் தன்னிகரற்றவர்
"விருதுபெற்ற தொழிற்றுறை நிபுணர்"

**Laminate, Mirror, Panel, Closet Droos**
**Carpet, Hardwood, Tiles, Granite Flooring**
**Windows + Doors, Kitchen + Bath**
**Renovation or New!**




*Sabesan's Choice*

**416 605 1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





23.09.2012 @ 5:00 PM

**ஈழநாடு நடாத்தும்**

தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர் உன்னிக்கிருஷ்ணனின்

# இன்னிசை விருந்தும்
# இராப்போசன விருந்தும்

போரின்போது தாய். தந்தையரை இழந்து அநாதரவான நிலையில் வாழும் குழந்தைகளில் 180க்கு மேற்பட்ட ஆண் - பெண் குழந்தைகளை முல்லைத்தீவுப் பிரதேசத்தில் பராமரித்து வரும் "புனிதபூமி அன்பு இல்லத்திற்கு" கடந்த செப்டம்பர் மாதம் முதல் ஈழநாடு ஊடாக உணவளித்துவரும் கனடா வாழ் தமிழ் உறவுகளுக்கு நன்றி தெரிவிக்கவும் - அந்தக் குழந்தைகளினதும். அயல் பகுதி பிள்ளைகளினதும் கல்வி மேம்பாட்டிற்காகவும் பிரத்தியேகக் கல்வி வசதிக்காகவும் "தென்னிந்திய பிரபல பின்னணிப் பாடகர் உன்னிக்கிருஷ்ணனின் இன்னிசை விருந்தும் - இராப்போசன விருந்தும்" நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. கருணையுள்ளம் கொண்ட அனைவரையும் அன்போடு அழைக்கின்றோம்.

காலம்:

**செப்டம்பர் 23, 2012 மாலை 5.00மணி**

இடம்:

**The Princess Banquet Hall**

(3330 Pharmacy Avenue, Scarborough - Pharmacy & McNicoll)

மேலதிக விபரங்களுக்கு:


**சரா மாஸ்டர் - 416.287.9223**

**ஈழநாடு பரமேஸ் - 416.841.9600**

"அன்ன யாவினும் புண்ணியம் கோடி ஆங்கோர் ஏழைக்கு எழுத்தறிவித்தல்"




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ISSN 1206-0585




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org